
Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-


# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 11 நவம்பர் 2007




பத்தாவது வேதாகம கருத்தரங்கில் சகோ. ஹென்றி மோகன் பேசுகிறார்



பத்தாவது வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் ஒரு பகுதி

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

காலம் : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

கல்வித்தகுதி : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

பட்டம் : **வேதயியலில் இளங்கலைப் பட்டம்** (B.B.S.)

## இயக்குநர்

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபுரம் ரோடு, காங்கயம் – 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603. செல் : 98427 - 30382.


## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நீங்கள் திருவசனத்தின்படி திருமுழுக்குப் பெற்றவர்களா ? ........ 9
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 22
7. கழுதையிடமிருந்து ........ 27
8. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 NOVEMBER - 2007 Issue - 11

ஆசிரியர் உரை

## சாகத் தயார், வாழத் தயாரில்லை

பிறப்பும், இறப்பும் மனிதனுடைய கட்டுப்பாட்டில் இல்லாத ஒன்று. இவ்வுண்மையை அறிவு பெருத்தவனும் ஒத்துக் கொள்ளுவான், அறிவுக்கும் தனக்கும் அறவே சம்பந்தமில்லை என்று வாழ்பவனும் ஏற்றுக் கொள்ளுவான். பல ஆயிரம் கோடிகளைத் தின்று, விண்ணில் சீறிப்பாய்ந்து செல்லும் விண்கலங்கள், வான் வீதியில் பாதை மாறிப்போகும்போது, அதை மிகவும் லாவகமாகத் தன்கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடும் மனிதன், அதே விண்கலம் அடுத்த அரைமணி நேரத்தில் மண்ணில் மோதி மரண ஓலத்தை ஏற்படுத்தப்போகிறதென்கிற உண்மையை அறியாதவனாகவே இருக்கிறான். இதற்குக் காரணம் அவனுக்கு அறிவு இல்லை என்பதை விட, மரணத்தின் மீது மனிதனுக்குக் கட்டுப்பாடும், அதிகாரமும் இல்லை என்று சொல்வதே சரியாக இருக்கும். சொல்லப்போனால், மரணம் நிகழும் போது மனிதன் பேசா மடந்தையாகக் கைகட்டி நின்று வேடிக்கை பார்ப்பதைத் தவிர அவனால் எதுவும் செய்ய முடிவதில்லை. "எல்லாம் என்னால் முடியும்" என்று தனக்குத்தானே எண்ணும் மனிதனின் இந்தக் கையாலாகாத தனத்தை, ஆவியானவர், முற்பிதாக்களின் யுகத்தைச் சேர்ந்த, தன் தாசனாகிய யோபுவைக் கொண்டு பளிச்செனப் பறைசாற்றியுள்ளார். **"இதோ, அவர் பறித்துக் கொண்டு போகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்? என்று"** (யோபு. 9:12).

இப்படி மரணம் தன் கட்டுப்பாட்டில் இல்லையென்பது மனிதனுக்கு தெளிவுறத் தெரிந்தாலும், மரணத்தைச் சந்திப்பதில் அவன் ஏக மனப்பாங்கு இருப்பவனாக இருப்பதில்லை. ஆம், **நான் வாழ்ந்தது போதும், இப்பொழுது**

**மரிக்கத் தயாராக இருக்கிறேன்** என்று உள்ளப்பூர்வமாக யாரும் சொல்லுவதில்லை. ஒருவேளை, ராஜ வாழ்க்கை வாழ்ந்து எல்லாவற்றையும் அனுபவித்திருந்தாலும் கூட, நான் மரிக்கத் தயார் என்று கூற மனம் வருவதில்லை. எப்படியெனில், 29 ஆண்டுகள் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்து கோலோச்சிய எசேக்கியா ராஜாவிடம், ஒரு சமயம், **நீர் பிழைக்கமாட்டீர்** என்று கர்த்தர் பெயரால் கர்த்தருடைய தீர்க்கன் கூறியபோது, அவன் தன் முகத்தைச் சுவர் புறமாகத் திருப்பிக் கொண்டு, "**ஆ, கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும், மன உத்தமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று மிகவும் அழுதான்**". (2 ராஜா 20:1-3). கிட்டத்தட்ட இதே எண்ண ஓட்டம் தான் மரணத்தைப் பொறுத்தளவில் எல்லோருக்குமே இருக்கிறது. ஒருவேளை அவன் துள்ளிக் குதிக்கும் பருவத்திலிருந்தாலும் அல்லது பிரசங்கி 12ம் அதிகாரம் 2-6 வசனங்களில் வர்ணிக்கப்பட்டிருக்கும் கிழட்டு வயதினனாக இருந்தாலும் இதுதான் பொதுவான நிலை.

சில நேரங்களில், இந்தப் பொதுவான நிலைக்கு மாறாக, விதிவிலக்கானவர்களும் இருக்கவே செய்கிறார்கள். இவர்களை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். **முதல் வகை**, எங்களுக்கு உயிர் முக்கியமில்லை என்று சூழ்நிலைக்கு ஏற்ப வேடமணிந்து, வாய் வீச்சுகாட்டி, ஆகாயத்தில் சொற்சிலம்பம் அடிப்பவர்கள். ஆம், இவர்கள் எங்களுக்கு எங்கள் உயிரைவிட தேசம் முக்கியம், இனம் முக்கியம், மொழி முக்கியம், கொள்கை முக்கியம், தலைவன் முக்கியம் என்று ஊர் அறிய தம்பட்டம் அடிப்பார்கள். ஆனால், அதற்கான விலை கொடுக்க வேண்டிய நேரம் வரும்போது அப்படியே அந்தர்பல்டி அடிப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நம்பிச் செயல்படுவது, மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்குச் சமமானது. இன்னொருவகை, உண்மையாகவே கொள்கை வழிநடப்பவர்கள் கொண்ட கொள்கையில் தெளிவும், நம்பும் தலைவன் வழியில் பிடிப்பும், நெஞ்சில் துணிவும் கொண்டவர்கள். இவர்கள் தங்கள் உயிரை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார்கள். செய்தித் தாள்களில் படித்து, தொலைக்காட்சிகளில் அவ்வப்பொழுது பார்க்கிறோம் அல்லவா "தற்கொலைப் படையினர்" என்று, அவர்களைப் போன்றவர்கள் இவர்கள். ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக, இலட்சியத்திற்காக உயிரையும் கொடுக்க இவர்கள் ஒருபோதும் அஞ்சமாட்டார்கள்.

மேற்கண்ட இருவகையில், முதல் வகைக்குச் சொந்தமாக ஒரு கட்டத்தில் இருந்த ஒரு மனிதன் பற்றித் தான் இம்மாதம் பார்க்கப் போகிறோம். அவன் இந்த ரகத்தைச் சேர்ந்த எல்லோரையும் போல், நான் மரிப்பதற்கும் தயார் என்று வாய்வீச்சு காட்டியவன் தான். ஆனால், விலை கொண்டுக்க வேண்டிய நேரம் வந்தபோது, தான் ஒரு புஸ்வானம் என்று தன்னை வெட்கமில்லாமல் வெளிப்படுத்தினான். ஒருவேளை, அவன் பின்னாளில் மனம் மாறி, இரண்டாம் வகைக்குச் சொந்தமாகிப் பெரும் புகழ் பெற்றான் என்பது உண்மையாக இருந்தாலும், நாம் அவன் முதல் வகைக்கு முக்கியத்துவம் கொடுத்தே காரியங்களைக் கற்றுக் கொள்ளப்போகிறோம்.

அதற்கு முன்பாக, நமது வழக்கத்தின்படியாக, அக்குறிப்பிட்ட சம்பவத்தின் பின்னணி பற்றித் தெரிந்து கொள்ளுவோம்.

ஒரு பாவமும் அறியாத இயேசுவைக் காட்டிக் கொடுப்பதற்கான பேரத்தை பிரதான ஆசாரியர்களிடத்தில் முடித்து விட்டான் கயவன் யூதாஸ் (மத் 26:14,15). அதற்கான சமயத்தை அதுமுதல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது, இயேசுவின் அறிவுரைப்படி பஸ்கா ஆசரிப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது (26:17-19). பந்தியின் போது, உங்களி லொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என்ற ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். அங்கே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராய்க் கேட்கத் தொடங்கினார்கள் (26:21,22). பிறகு, கர்த்தரின் பந்தி முடிந்து, ஸ்தோத்திரப் பாட்டைப்பாடி, அருகிலிருந்த ஒலிவமலைக்குப் போனார்கள் (26:30). அங்கே இயேசு, இந்த ராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள் என்று இன்னொரு குண்டைத் தூக்கிப்போட்டார் (26:31). அதற்குப் பேதுரு, "**உமது நிமித்தம் எல்லாரும் இடறலடைந்தாலும், நான் ஒருக்காலும் இடறலடையேன்**" என்று வாய்வீச்சு வீசினான் (26:33). நாமாக இருந்திருந்தால் என்ன செய்திருப்போம்? அவன் வாயின் வார்த்தைகளை அப்படியே நம்பி ஆரத்தழுவியிருப்போம். ஆஹா, இவனல்லவா சீடன் என்று. ஆனால், நாளைக்கு நடப்பதை அறிந்த இயேசு அவனை நோக்கி; **இந்த ராத்திரியிலே சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்** என்றார்.

ஓ, நம்மைப் பற்றி இயேசு நன்றாகவே தெரிந்து வைத்திருக்கிறார் என்று இங்கேயாவது பேதுரு பேசாமலிருந்திருக்கலாம். ஆனால், மறுபடியும் வாய்வீச்சு காட்டுகிறான். **உம்மோடே மரிக்க வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று** (26:35). வாய்வீச்சு வீசியே பழக்கப் பட்டவர்களுக்கு அந்தக் குணம் அவ்வளவு சீக்கிரம் மாறாதோ? இந்த இடத்தில் இயேசு இவனுக்கு இனியும் பதிலளிப்பது தேவையில்லாதது என்று முடிவெடுத்து, சீடர்களை கெத்செமனே தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார் (மத். 26:36). உமக்காக நான் மரிக்கத் தயார் என்ற பேதுரு சொன்னது பொருளில்லாத வார்த்தைகள் என்பதை இப்படித் தனது செயலின் மூலம் நாசுக்காக வெளிப்படுத்தினார்.

பேதுரு பற்றிய இயேசுவின் அப்போதைய கருத்து சரிதான் என்பதை மெய்ப்பிக்கும்படியாகவே அவனது செயல்பாடுகள் அதைத் தொடர்ந்து இருந்ததை நாம் தெரிந்து கொள்ள முடியும். ஆம்,. மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருந்த இயேசு, பேதுருவையும், செபெதேயுவின் குமாரர் இருவரையும் பார்த்து...... நீங்கள் இங்கே தங்கி, **என்னோடே விழித்திருங்கள்** என்று சொல்லி, சற்று அப்புறம் போய்..... பாரத்தோடு ஜெபித்துத் திரும்பிய போது, அவர்கள் குறட்டை விடுவது கண்டு, பேதுருவை நோக்கி; **நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக் கூடாதா?** என்றார். மூன்று பேரும் தூங்கியிருந்தாலும் பேதுருவைப் பார்த்துத் தான் இப்படிக் கேட்டுள்ளார். இது எப்படியிருக்கிறது? எனக்காக மரிக்கவும் தயாராக

இருப்பவன் நீ தானா? ஒரு மணி நேரம் என்னிமித்தம் விழித்திருக்க முடியவில்லை. ஆனால், நீ எனக்காக மரிக்கத் தயார் என்று நீ சொல்லுவதை நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? என்பது போலத்தானே உள்ளது.

அடுத்து, **ரபீ வாழ்க** என்று சொல்லி முத்தமிட்டுக் காட்டிக் கொடுக்க வந்த யூதாசை இயேசு, **சிநேகிதனே** என்றழைத்தார். அப்பொழுது பேதுரு, தன் பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான் (மத். 26:49-51). அப்பொழுது இயேசு, உன் பட்டயத்தைத் திரும்பவும் அதின் உறையிலே போடு என்று கடிந்து கொண்டார். மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, இச்செயலுக்குக் காரணம் பேதுரு இயேசுவின் மீது கொண்டிருந்த பற்றுத்தானே என்பது போல் தெரியும். ஆனால், உண்மை என்ன? சத்துருவைச் சிநேகியுங்கள் என்று போதித்த இயேசு (மத் 5:44) ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு என்று போதித்த இயேசு (மத் 5:39). தான் போதித்தபடியே காட்டிக் கொடுக்க வந்தவனைச் சிநேகிதனே என்றழைத்த இயேசு, பேதுருவிடம் என்ன எதிர்பார்த்திருப்பார்? **கத்தியைத் தீட்டும் படியாக எதிர்பார்த்திருப்பாரா?** அல்லது **தன் பக்தியைக் காட்டும்படி விரும்பி யிருப்பாரா?** சொல்லுங்கள். என்னிமித்தம் மரிக்கவும் தயார் என்றவன், குறைந்தபட்சம் என் உபதேசப்படி வாழ்ந்தால் கூடப் பரவாயில்லையே அதற்குக்கூட லாயக்கற்றவனாக இருக்கிறானே என எண்ணி வேதனைப் பட்டிருப்பாரா இல்லையா? ஆம், கிறிஸ்துவுக்காக சாகக்கூடத் தயார் என்றவன், அவர் உபதேசத்தின்படி வாழத் தயாரில்லை.

பிறகு, இயேசுவானவர் வேத வசனங்கள் நிறைவேறும்படியாக பிடிக்கப்பட்டார் (மத். 26:55) அப்பொழுது என்ன நடந்தது? உம்மோடே மரிக்கவும் தயார் என்ற பேதுருவும், அவனைத் தொடர்ந்து சீடரெல்லாரும் (மத். 26:35) அவரை விட்டு ஓடிப்போனார்கள் (மத் 26:56) இதுதான், பேதுரு, இயேசுவுக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருந்ததன் இலட்சணமோ? அவரை நெருங்கி பின்பற்றுவதற்குக் கூட மனமற்றவனாக, தூரத்திலே பின்பற்றி விட்டு (மத். 26:58) அவருக்காக மரிக்கிறானாம்! மனம்போல் கதைவிட இவனுக்கு இயேசு தான் கிடைத்தாரா?

சரி, அதுதான் போகட்டும், அதைத் தொடர்ந்தாகிலும் சுதாரித்துக் கொண்டானா? இல்லையே! இயேசு பிரதான ஆசாரியனுடைய அரமனைக் குள்ளாக சீரழிக்கப்பட்டபோது, முடிவைப்பார்க்க அரமனை முற்றத்தில் சேவகரோடு உட்கார்ந்திருந்தவனை, வேலைக்காரி அடையாளம் கண்ட போது, **தெரியாது** என்று மறுதலித்துச் சொல்லிவிட்டு, வேறொருத்தியின் மூலம் விஷயம் வெளியானபோது **நான் அறியேன்** என்று ஆணையிட்டு மறுபடியும் மறுதலித்து, இரண்டு பெண்களிடம் போக்குக்காட்டி விட்டு, அங்கே நின்ற ஆண்களில் சிலர், மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன் என்று அழுத்தமாகச் சொன்னபோது, இனி பாச்சா பலிக்காது என்று தெரிந்து, **சபிக்கவும், சத்தியம் பண்ணவும்** தொடங்கி விட்டானே. தன் சொல்லின் மூலமும், செயலின் மூலமும் அவருக்காக வாழ முடியாத நிலையிலிருந்த

இந்தப் பேதுரு தான், நான் உம்மோடே மரிக்க வேண்டியிருந்தாலும், உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று சொற்சிலம்பம் ஆடியுள்ளான் பாருங்களேன்! அதுவும் யாரிடம்? இயேசு ஆண்டவரிடம்!

சரி, இது தான், இச்சம்பவத்தின் பின்னணி. இப்பொழுது இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்ன என்று பார்ப்போம்.

## 1 மரிக்கத் தயார் என்றவன் ஒரு மணிநேரம் கூட கொடுக்கத் தயாராக இல்லை

பேதுருவின் வாய் வீச்சு சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், நாம் நம்முடைய நேரத்தைக் கிறிஸ்துவுக்காகக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டுமென்பது.

பேதுரு, இயேசு ஆண்டவரோடு சேர்ந்து மரிப்பதற்கும் தயார் என்று கூறினான். ஆனால், அவருக்காக ஒரு மணி நேரம் விழித்திருக்க அவனால் முடியவில்லை. இரண்டு முறை பேதுருவும் மற்று இரண்டு பேரும் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு (மத். 26:40,43) இயேசு வேதனைப்பட்டார்.

அநேகராகிய நாமும் கூட, நம்முடைய நேரத்தை தேவனுக்கும் அவருடைய குமாரனாகிய இயேசுவுக்கும் கொடுக்கிற காரியத்தில் இந்த விதமாகத்தான் உள்ளோம். கிறிஸ்துவுக்காக, கிறிஸ்துவின் வேலைக்காக சில நேரங்களில் நம்முடைய பொன்னையும், பொருளையும் கூட கொடுப்பதற்கு தயங்காத நாம் நம்முடைய நேரத்தைக் கொடுப்பதற்கு மாத்திரம் பிடிவாதமாக மறுக்கிறோம். ஆம், நம்மாலே ஜெபிக்க நேரம் ஒதுக்க முடிவதில்லை. வேதம் வாசித்துத் தியானிக்க நேரம் ஒதுக்க முடிவதில்லை, ஊழிய காரியங்களில் பங்கு பெற நேரம் ஒதுக்க முடிவதில்லை. அவ்வளவு ஏன், ஞாயிற்றுக் கிழமை ஆராதனையில் தவறாமல் பங்கு பெறுவதற்குக் கூட நேரம் கண்டுபிடிக்க முடிவதில்லை. கேட்டால், பேதுருவைப் போல, வாய் நிறையப் பேச மாத்திரம் தயங்குவதில்லை. உண்மைதானே!

இயேசுவானவர், தம்முடைய மலைப்பிரசங்கத்தில், **முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள்** (தம். 6:33) என்றார். நம்மில் எத்தனை பேர் இயேசு சொன்னபடி, முதலாவது அவரைத்தேடுகிறோம்? தகப்பன் மரித்து விட்டான், அடக்கம் பண்ண உத்திரவு கொடும் என்று கேட்டபோது கூட, "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும், நீ என்னைப் பின்பற்றி வா" என்றாரே (மத். 8:21,22) அதன் பொருள் என்ன? அவருக்கே நம்முடைய முதல் கனத்தையும், முதல் நேரத்தையும் கொடுக்க வேண்டுமென்பது தானே. நாம் அவருக்கு நம்முடைய நேரத்தையும், அவர் நம்மிடம் எதிர்பார்ப்பதையும் அவர் திருப்திப்படுகின்ற வகையில் கொடுக்காமல், நாம் சொல்லும் சாக்குப்போக்கு களை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நாம் எதிர்பார்த்தால் அது நடக்குமா? சாக்குப்போக்குகளுக்குச் சாட்டையடி உண்டு என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று தானே ஒரு உவமையையே சொல்லி யுள்ளார் (லூக். 14:15-20).

ஆகையால், அருமையானவர்களே, நாம் நம்முடைய பக்தி வாழ்க்கையில் வாய்ச் சொல் வீரராக இல்லாமல், தேவ காரியங்களையும், சபை கூடி வருதலையும் புறக்கணியாமல், தேவன் நமக்குக் கிருபையைக் கூட்டி வழங்கும் நாட்களையும், நேரத்தையும் அவருக்கும், அவருடைய சபைக்கும், ஊழியத்துக்கும் கொடுத்து நாம் அவருக்காக வாழத்தயார் என்பதை நம்முடைய செயல்களின் மூலம் நிரூபிப்போம்.

## II மரிக்கத் தயார் என்றவன் அவர் உபதேசப்படி நடக்கத் தயாராக இல்லை.

பேதுருவின் வாய்வீச்சு சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ நாம் தயாராக இருக்க வேண்டுமென்பது.

ஆண்டவரே, உம்மோடு மரிக்க வேண்டியிருந்தாலும், நான் உம்மை மறுதலிக்கமாட்டேன் என்று பேதுரு உறுதிப்பட கூறினான். ஆனால், கிறிஸ்துவை மறுதலிப்பதற்கும் முன்னதாகவே, அவருடைய கண்களுக்கு முன்பாக, பட்டயத்தை உருவி வேலைக்காரனின் காதை வெட்டியதன் மூலம், **அவருடைய உபதேசத்தை மறுதலித்து விட்டான்.** இயேசு உபதேசித்த விதத்தைக் கொஞ்சம் கவனியுங்களே. **அவர்கள், கேட்டறியும் திராணிக்குத் தக்கதாகப் பேசியுள்ளார்** (மாற் 4:33) அதாவது, இயேசுவின் போதனை, உபதேசம் எல்லோருக்கும் புரியும்படியாகவே இருந்துள்ளது. எனக்கு விளங்கவில்லை என்று யாருமே கூறமுடியாது. ஆகவே, அவ்வளவு எளிய நடை.

ஆனால், சாகத் தயார் என்று சொன்ன பேதுரு, அவருடைய உபதேசத்தை ஏற்றுக் கொள்ளாமலிருந்திருக்கிறானே, இது எப்படி? அதுவும், அவர் கண் எதிரே! அன்பானவர்களே, இந்தப் பேதுரு போன்று தான் நம்முடைய நிலையும் இருக்கிறதோ? அநேக சமயங்ககளில், ஏதோ பேதுரு போல் உணர்ச்சி வசப்பட்டு, அவருக்காகக் காரியங்களைச் செய்கிறவர்களாக உள்ளோமே தவிர, செய்கிற காரியங்கள் ஒவ்வொன்றின் பொருளையும் உணர்ந்து செய்கிறவர்களாகத் தெரியவில்லையே. நம்முடைய செயல் இயேசுவின் போதனைகளோடு ஒத்துப்போகிறதா என்று பார்த்துச் செய்கிறோமா? இங்கே பேதுரு, **இயேசு எனக்கு வேண்டும்,** ஆனால், **அவருடைய உபதேசம் எனக்கு வேண்டாம் என்று தானே தன் பட்டயத்தை உருவின செயலின் மூலம் கூறுகிறான்.** இது எப்படி நியாயமாகும்? இயேசு தன்னோடிருப்பவர்களே தன் போதனைகளைக் கேவலப்படுத்தும்படியாகவா நாடு, நகரமெல்லாம் நடந்து போதித்தார்?.

அன்பானவர்களே, இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையும் கூட அச்சில் ஊற்றி எடுத்தது போல் இப்படித்தானே இருக்கிறது! ஏன் ஒரு மாதிரி பார்க்கிறீர்கள்? சொல்வது நியாயமா? இல்லையா? **இயேசு எங்களுக்கு வேண்டும், ஆனால், அவருடைய உபதேசம் எங்களுக்கு வேண்டாம்** என்று தானே கூறுகிறோம். அதனால்தானே இயேசுவைப் பற்றி மாத்திரம் கூறுங்கள். **அவர் கட்டின சபையைப்** பற்றிப் பேச வேண்டாம் என்கிறோம். இரட்சிப்பு அவசியம் என்று ஏற்றுக்கொள்ளும் நம்மில் எத்தனைபேர் அந்த இரட்சிப்பு **கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி** விசுவாசித்து (மாற்16:16), மனந்திரும்பி (அப். 2:38), அறிக்கையிட்டு (ரோம 10:9,10), பாவமன்னிப்புக்

கென்று ஞானஸ்நானம் பெற்றதாக இருக்க வேண்டுமென்று ஒத்துக்கொள்ளுகிறோம்? கர்த்தரின் பந்தி அவசியம் என்று சொல்லும் நாம், **அது வாரம் தவறாமல்** கடைபிடிக்கப்பட வேண்டியது அவசியம் என்பதில் எத்தனைபேர் ஒருமித்த கருத்துடையவர்களாக உள்ளோம்? ஆராதிப்பது முக்கியம் என்று கருதும் நாம், அந்த ஆராதனை **ஆவியோடும், சத்தியத்தோடும்** இருக்கிறதா (யோவா 4:24) என்று உறுதி செய்து கொள்ள எத்தனைபேர் ஆயத்தமாக உள்ளோம்? அப்படி உறுதி செய்கிறவர்களாக நாம் இருந்தால், ஆராதனையில், **இசைக் கருவிகள்** (எபே 5:19) போன்ற மனித உபதேசங்கள் எப்படி உள்ளே நுழைந்தது? இப்படியாக, ஒவ்வொன்றாக எண்ணிப்பாருங்கள், பேதுரு போன்ற சிந்தை தான் நமக்கும் உள்ளதா என்பது புரியும்.

அருமையானவர்களே, இவைகளெல்லாம் நமக்கு என்ன சொல்லுகிறது? கிறிஸ்து வேண்டும், அவருடைய உபதேசம் வேண்டாம் என்பதுதானே. ஆனால், கிறிஸ்துவின் உபதேசம் முக்கியம், மிக முக்கியம்; உபதேசம் குறித்து, அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லுவதைத் தயவு செய்து கவனியுங்கள், **கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல;** கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக் கிறவனோ, பிதாவையும், குமாரனையும் உடையவன் (2யோவான் 9). நீங்கள் எப்படிப்பட்டவர்களென்று தயவு செய்து தீர்மானியுங்கள்.

## III மரிக்கத் தயார் என்றவன் அவரைப் பின்பற்றி வாழத் தயாராக இல்லை

பேதுருவின் வாய்வீச்சு சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், இப்பூமியின் வாழ்க்கையில் என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் கிறிஸ்துவுக்காக தைரியமாய் வாழ வேண்டுமென்பது.

உம்மோடு மரிக்கவும் தயார் என்று சொன்ன பேதுரு, அவர் பிடிபட்ட போது என்ன செய்தான்? மற்ற சீடர்களோடு சேர்ந்து தானும் ஓடிப்போனான். இதையாவது மற்ற சீடர்களைப் போல் உருப்படியாகச் செய்தானா? இல்லை. பதுங்கிப் பதுங்கி தூரத்திலே பின் சென்று, முடிவைப் பார்க்க கூட்டத்தோடு கூட்டமாக உட்கார்ந்து கொண்டான் (26:58). பிறகு வேலைக்காரிக்குப் பயம், வேறொரு பெண்ணுக்குப் பயம், தொடர்ந்து அங்கே உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்று சொன்னபோது, தான் என்ன பேசுகிறோம், என்ன செய்கிறோம் என்பது கூடத் தெரியாமல், சபிக்கவும், சத்தியம் பண்ணவும் தொடங்கினான்.

இப்படிப்பட்ட தொடை நடுங்கி சீடர்களை உருவாக்கவா இயேசு இவர்களை மூன்றை வருடங்கள் கூட வைத்திருந்தார்? இவர்கள் யாருக்கு பயப்பட வேண்டுமென்று இயேசு போதித்திருந்தார்? **ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம், ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்** (மத். 10:28) இப்படிப்பட்ட உபதேசங்களைக் கூட இருந்து கேட்ட பேதுரு என்ன செய்திருக்க வேண்டும்? அவரைத் திருடனைப் பிடிப்பது போல் பிடித்த போது, **கூடவே இருந்திருக்க வேண்டும்.** தூரத்திலே பின்பற்றாமல், **அவர் கையைப் பிடித்துச்**

**சென்றிருக்க வேண்டும்.** வேலைக்காரியும், மற்றவர்களும் கேட்ட போது, ஆமாம், **நான் இயேசுவின் சீடன்** என்று சத்தமாகச் சொல்லியிருக்க வேண்டும். மரிக்கவும் தயார் என்றவன், இவைகள் எதையுமே செய்ய வில்லையே, அவருடைய உபதேசத்தை அறிந்தவன் அவருக்காக வாழ வில்லையே தைரியம் என்பது மருந்துக்குக்கூட இல்லாமல் போய்விட்டதே!

கிறிஸ்துவுக்காக வாழும் வாழ்க்கை என்பது நாம் நினைப்பதைக் காட்டிலும், நாம் பேசுவதைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்டது. போகிற போக்கிலே அதை நடத்தி விட முடியாது. அதற்காகப் பிரத்தியேக முயற்சி வேண்டும். பவுலடியார், பிலிப்பி பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது சொல்லுகிறது போல, **பின்னானவைகளை மறந்து, முன்னானவை களை நாடி, கிறிஸ்து இயேவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக பரலோக இலக்கை நோக்கித் தடைகளை எல்லாம் தாண்டித் தாண்டிப் போகிறதாக இருக்க வேண்டும்** (பிலி. 3:13,14). இதைச் சாதிப்பதற்கு, எபிரெயர் ஆசிரியர் கூறுவது போல், ".... பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற **இயேசுவை நோக்கி**, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓட வேண்டும்" (எபி. 12:1)

அழிந்து போகும் இப்பூமிக்குரிய வாழ்க்கையின் பாடுகள், பாரங்கள், துயரங்கள், கண்ணீர், கவலை, வேதனை, சோதனை, பாசம், பிணைப்பு, பயம், மரணம் போன்ற எதுவும் நமக்கும் இயேசுவுக்கும் குறுக்கே நிற்க அனுமதித்து விடக்கூடாது. **கிறிஸ்துவுக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தைரிய முடையவர்களாகவும்** (பிலி. 4:13) அதே கிறிஸ்துவுக்காக **எல்லாவற்றையும் விடத் தயாரானவர்களாகவும் இருக்க வேண்டும்** (பிலி. 3:11) பவுலடியார் சொல்வது போல "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" (பிலி 1:21) என்று சொல்லத்தக்க மனப்பான்மையை நாம் உண்மையாகவே எப்பொழுது பெறுகிறோமோ, அப்பொழுது தான், நாம் கிறிஸ்தவர்களாக வாழ ஆயத்தமாயிருக்கிறோம் என்று அர்த்தம். அதுவரைக்கும், நாம் கிறிஸ்தவன் என்ற பெயரில் நம்மை நாமே ஏமாற்றுகிற ஒரு போலி வாழ்க்கையை நடத்துகிறவர்களாகவே இருப்போம். வாய் வீச்சு பேதுரு வாகவே அவர் பார்வையில் காணப்படுவோம்.

அன்பானவர்களே, நம்மில் எத்தனை பேர் செயல்பாடுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்குத் தயாராக உள்ளோம்? கிறிஸ்து நமக்காகப் பரலோக மகிமையைத் துறந்து பூமிக்கு வந்தார் (பிலி. 2:7) கிறிஸ்து நமக்காக ஏழைக் கோலம் எடுத்தார் (2:8), நமக்காகவே வாழ்ந்தார் (2:8). நமக்காக மரித்தார் (2:8) நமக்காக உயிர்த்தார் (1கொரி 15:4). நாம் இரட்சிப்படையவும், பரிசுத்த வாழ்வு வாழவும் வேதவசனங்கள் கொடுத்தார் (2 தீமோ 3:16,17) நமக்காக வருகிறார் (யோவா 14:3); நம்மைக் கொண்டு போய் பரலோகில் சேர்ப்பார் (1தெச 5:17). கிறிஸ்து நமக்காக வேறு என்னதான் செய்ய வேண்டும்?

இவைகளெல்லாம் உண்மையாக இருக்கும்போது, நமக்காக மரித்து உயிர்த்த கிறிஸ்து இயேசுவுக்காக நாம் ஏன் வாழக்கூடாது? பேசுவ தோடல்லாமல் அவருக்காக வாழத் தீர்மானிப்போம். ஆமென்.

***EZS. ராஜநாயகம்***

# நீங்கள் திருவசனத்தின்படி திருமுழுக்குப் பெற்றவர்களா?

இன்றைய மார்க்க உலகம் ஞானஸ்நானத்தை, தண்ணீருக்குள்ளான அடக்கமென்றும், தண்ணீரைத் தெளித்தல் அல்லது ஊற்றுதல் என்றும் கூறுகிறது. மற்ற சிலர், ஆவியினால் பெறுகிற ஒன்றுதான் ஞானஸ்நானம் என்கிறார்கள்.

பெரும்பாலான மதத் தலைவர்கள், ஞானஸ்நானம் முக்கியமானதே அல்ல, அது இரட்சிப்போடு சம்பந்தப்பட்டதல்ல, நாம் ஏற்கனவே இரட்சிக்கப் பட்டோம் என்பதற்கான வெளிப்புற அடையாளம் தான் ஞானஸ்நானம் என்கிறார்கள்.

வேதாகமம் ஞானஸ்நானத்தை தண்ணீருக்குள்ளான அடக்கம் என்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கூறும்போது, "ஞானஸ்நானத்தி னாலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத் தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்" என்கிறார் (கொலோ 2:12). ரோமர்களுக்கு அவர் எழுதுகையில், "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப் பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து வுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம்" (ரோமர் 6:3,4).

அப். 8:26-39ல் பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு சுவிசேஷம் சொல்கிற நிகழ்வு நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. பிலிப்பு தனக்கு பிரசங்கித்ததை நன்றாக புரிந்து கொண்ட எத்தியோப்பிய மந்திரி, தண்ணீருள் இடத்திற்கு வந்த போது ஞானஸ்நானம் பெறுவதற்கு என்ன தடை என்று கேட்டான். பிலிப்பு, ஞானஸ்நானத்தைப் பற்றி பேசினதாக ஆவியினால் ஏவப்பட்ட வேத பகுதி நமக்கு சொல்லவில்லை என்ற போதிலும், எத்தி யோப்பிய மந்திரி கேட்ட கேள்வியிலிருந்து பிலிப்பு ஞானஸ்நானத்தைப் பற்றி பேசியிருப்பதையும், அதன் முக்கியத்துவத்தைப் பற்றி எத்தியோப்பிய மந்திரி புரிந்துகொண்டதையும் நாம் அறிந்துகொள்ளலாம். மந்திரி கேட்ட கேள்விக்கு பிலிப்பு பதில் கூறுகையில், நீர் முழு இருதயத்தோடு கிறிஸ்துவை விசுவாசித்தால் ஞானஸ்நானம் எடுப்பதற்கு தடையில்லை என்றார். அதற்கு மந்திரி இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று நான் விசுவாசிக் கிறேன் என பதில் அளித்தான். ஆகவே, அந்நேரந்தானே எந்த மனிதனுடைய சம்மதம் வாங்க பலநாள் காத்திராமல் அவர்கள் இரதத்தை நிறுத்தி,

எத்தியோப்பிய மனிதன், கர்த்தருக்குள் ஞானஸ்நானம் எடுத்து, இயேசு வானவர் மத்தேயு 28:18-20 மற்றும் மாற்கு 16:15,16 சொன்னது போல பாவமன்னிப்பு பெறும்படி இருவரும் தண்ணீருக்குள் இறங்கினார்கள்.

இப்பொழுதும், இந்த மனிதனின் ஞானஸ்நானத்தை மனதில் கொண்டு, நாங்கள் கேட்கிறோம், "ஞானஸ்நானத்தைக் குறித்து பவுல் என்ன சொன்னார்?" அது தண்ணீருக்குள்ளான ஓர் அடக்கம். நீண்ட நாளைக்கு முன்பே இதே அனுபவத்தைத்தான் வனாந்திர வழியில் அந்த மந்திரி பெற்றுக்கொண்டார்.

மீண்டும் ரோமர் 6ம் அதிகாரத்தில், பவுல், ஞானஸ்நானத்தை கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளோடு சம்பந்தப்படுத்தி பேசுகிறார். இயேசுவானவர் சிலுவையில் மரித்தது போல, ஒரு பாவியும், பாவத்திற்காக மரிக்கிறான். இயேசு இப்பூமிக்குக் கீழ் அடக்கம் பண்ணப்பட்டது போல, அவனும் தண்ணீரிலான கல்லறையில் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறான் மற்றும் கிறிஸ்து கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்தது போல, ஒருவன் கர்த்தருக்காக வாழ தண்ணீரிலான கல்லறையிலிருந்து உயிரோடு எழுந்திருக்கிறான். பவுல் இதை இவ்வாறாக விளக்குகிறார், "முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைக ளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமை களானீர்கள்" (ரோமர் 6:17,18).

பாவத்திற்கு அடிமைகளாக இருந்த அவர்கள் இப்பொழுது நீதிக்கு அடிமைகளாக மாறியிருக்கிறார்கள். அவர்கள் இப்படி மாற எது காரணமாகயிருந்தது? அவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். பவுல் கூறும் சட்டம் சுவிசேஷம்; இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், கீழ்ப்படிதல். உபதேச சட்டம் என்று அவர் கூறும் போது, பாவத்திற்கான அவர்களுடைய மரணத்தையும், ஞானஸ்நானத்தின் தண்ணீரில் அவர்களுடைய அடக்கத்தையும், ஞானஸ்நானத்தின் தண்ணீரிலிருந்து அவர்களின் உயிர்த்தெழுதலையும் குறிக்கிறது. அவர்கள் மனப்பூர்வமாக கீழ்ப்படிந்ததினால், அவர்கள் நீதிக்கு அடிமைகளானார்கள். கவனியுங்கள்; அவர்களுடைய எஜமான் மாற்றப்பட்டது **"விசுவாசத்தில் மாத்திரமல்ல"** அவர்கள் மனப்பூர்வமாக, விசுவாசத்துடன் தேவனுக்கு கீழ்ப்படிந்தபடியினால் தான் அப்படியானது.

அவர்களுடைய ஞானஸ்நானம் "கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளானது" என்று விவரிக்கப்பட்டது. அதாவது, கிறிஸ்துவின் மரணம் தரும் இரத்தாம்பர சிகப்பாயிருந்த பாவம் பஞ்சைப்போல வெண்மையாகும் பலனைப் பெற்றார்கள். இந்த தொடர் நிகழ்வின் மூலமாக புதிய பிறப்பின் அனுபவத்தைப் பெற்று, தேவ குடும்பத்தின் அங்கமானார்கள்.

ஞானஸ்நானத்தின் தண்ணீரில் ஏதேனும் விசேஷமோ? அல்லது மந்திர சக்தியோ இருந்ததா? இல்லை. தண்ணீரில் எந்த சக்தியுமில்லை. விசுவாசத்தோடு தேவனுக்கு கீழ்ப்படிதலில் தான் உள்ளது. நமது பாவங்கள் ஞானஸ்நானத்தின் தண்ணீரில் கழுவப்படுவதாக தேவன் கூறுகிறார்.

(எபே. 5:25-27; 1பேதுரு 3:20,21). இது தான் இந்த தண்ணீரின் வல்லமை நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய குமாரனுடைய இரத்தத்தின் மூலமாக பாவ மன்னிப்பைப் பெறும் கருவியாக இத்தண்ணீர் இருக்கிறது.

1கொரி. 15:1-4ல் நாம் சுவிசேஷத்தின் உண்மைகளைக் குறித்துப் படிக்கிறோம். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய வற்றை பவுல் அங்கே பட்டியிலிடுகிறார். நாம் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், உண்மைத் தகவல்களுக்கு நாம் எப்படி கீழ்ப்படிவது. ஆகவே தான் தேவன் நாம் கீழ்ப்படியவேண்டிய கட்டளைக் கொடுத்திருக்கிறார். அந்த கட்டளைகள் என்னவென்றால், இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவான் 8:24). மனந்திரும்ப வேண்டும், அதாவது பாவ வாழ்விலிருந்து நாம் திரும்ப வேண்டும். ...... நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் (லூக். 13:3) கிறிஸ்துவை விசுவாசிக்கிறோம் என்று அறிக்கையிட வேண்டும் ... நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்; இயேசு கிறிஸ்துவைத் தேவனுடை குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அப். 8:37). கடைசியாக பாவமன்னிப்புக் கென்று தண்ணீரில் திருமுழுக்குப் பெற வேண்டும். ("நீங்கள் மன்நதிரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமாத்தி னாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" அப். 2:38)

ஒருவன் இந்த கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது, அவனுடைய கீழ்ப்படிதலை, கிறிஸ்து அவரது மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் காட்டிய கீழ்ப்படிதலோடு சம்பந்தப்படுத்திப் பார்க்க முடிகிறது. கிறிஸ்து தனது சீஷருக்கு கொடுத்த கட்டளை என்னவென்றால், "பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக் கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16).

பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும், முதல் சுவிசேஷ பிரசங்கம் செய்த போது, விசுவாசித்தவர்களிடம், "நீங்கள் ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.." (அப். 2:38). 1 பேதுரு 3:21ல் ஜலப்பிரளயத்தினால் உலகம் அழிக்கப்பட்டபோது, அதே தண்ணீரால் நோவாவும் அவன் குடும்பமும் எப்படி இரட்சிக்கப்பட்டதோ அதுபோல அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமும் நம்மை இரட்சிக்கிறது என்கிறார்.

இந்த வசனங்கள் எல்லாம் "ஞானஸ்நானம் மாத்திரம்" நம்மை இரட்சிக்கிறது என்றோ அல்லது ஞானஸ்நானத்தின் தண்ணீருக்கு இரட்சிக்கும் வல்லமை உண்டு என்றோ நமக்கு போதிப்பதில்லை, ஆனால் புதிய ஏற்பாட்டில் ஞானஸ்நானத்தை பற்றி பேசிய ஒவ்வொருவரும் அது

இரட்சிப்புக்கு அவசியமென்று கூறியிருக்கிறார்கள். ஒருவன் விசுவாசத்துடன் கீழ்ப்படியும்போது, தன் கீழ்ப்படிதலை ஞானஸ்நானத்தில் வெளிப்படுத்துகிறான், அப்பொழுது கிறிஸ்துவின் இரத்தம் அவனை சுத்திகரிக்கிறது.

கிறிஸ்துவை விசுவாசிக்கும் பெரும்பாலானோர் மிகவும் எளிதாக இருக்கிற ஞானஸ்நானத்தை எதிர்ப்பதை நாம் காண்கிறோம். அவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம் ஞானஸ்நானத்தின் தண்ணீரில் என்ன இருக்கிறதென்றும் அது நம்மை இரட்சிக்காது என்றும் அவர்களுக்கு மீண்டும் மீண்டும் சொல்லப்படுவதுதான். பிரிவினை சபையார் கொடுக்கும் ஞானஸ்நானம், வேதாகமத்தின்படி இல்லை என்பதால் அது நம்மை இரட்சிக்காது என்பது உண்மைதான். ஆனால் புதிய பிறப்பில்லாமல் அதாவது ஞானஸ்நானமில்லாமல் ஒருவனும் இரட்சிக்கப்படமுடியாது என்று புதிய ஏற்பாடு கூறுகிறது.

மத உலகில் பெரும்பாலானவர்கள் வேதாகமம் கூறும் ஞானஸ்நானத்தை எதிர்க்கிறார்கள், அதற்கு இரட்சிப்போடு எந்த சம்பந்தமு மில்லை என்று கூறுகிறார்கள். அப்படி அவர்கள் சொல்லியும் தங்கள் சபை அங்கத்தினர்களாக ஞானஸ்நானம் அவசியம் என்கிறார்கள். இரட்சிப்புக்கு அவசியமில்லாத ஞானஸ்நானம், சபை உறுப்பினர்களாக மட்டும் ஏன் அவசியப்படுகிறது. அதை ஏன் அவர்கள் முக்கியப்படுத்த வேண்டும்.

ஞானஸ்நானம் இல்லாமல் இரட்சிக்கப்படுகிறேன் என்று சொல்லுகிறவர்கள் இந்த பரிசோதனையை மேற்கொள்ளட்டும். நீங்கள் எப்பொழுது இரட்சிக்கப்பட்டீர்கள்? அதற்குப்பின் எத்தனை நாட்கள் கழித்து ஞானஸ்நானம் பெற்றீர்கள்! நீங்கள் ஒரு தருணத்தில் இரட்சிக்கப்பட்டு அதன் பின் 2 அல்லது 3 நாட்கள் கழித்து ஞானஸ்நானம் பெற்றால், நாம் ஏற்கனவே படித்த மாற்கு 16:15,16 அப். 2:38 ஆகிய வசனங்களோடு அது எப்படி பொருந்தும்? கலா 3:27ல் நாம் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுகிறோம் என்கிறது. நாம் ஒரு காலத்தில் இரட்சிக்கப்பட்டு, பின்பு ஞானஸ் நானம் பெற்றோம் என்று சொன்னால், நாம் கிறிஸ்துவுக்கு வெளியே இரட்சிக் கப்பட்டோம் என்று சொல்லாமல் சொல்லுகிறோம். அதாவது அவருக்குள் போவதற்கு முன்பே நமக்கு இரட்சிப்பு உண்டென்று கூறுகிறோம். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே, ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக் குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே". (கலாத். 3:26,27) கிறிஸ்துவுக்கு வெளியே இரட்சிப்பு உண்டென்று நீங்கள் உண்மையில் நம்புகிறீர்களே?.

நீங்கள் வேதத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறீர்களா? நீங்கள் விசுவாசியாகியிருக்களாம், நீங்கள் தண்ணீர் முழுகியிருக்கலாம் ஆனால், நீங்கள் இயேசுவே விசுவாசித்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவ குமாரனென்று அறிக்கையிட்டு (உங்கள் பாவங்களை அறிக்கை யிட்டால்) கிறிஸ்துவின் இரத்தத்தைக் கொண்டு கழுவப்படும்படி ஞானஸ் நானம் பெறாவிட்டால் நீங்கள் வேதாகமத்தின்படி ஞானஸ்நானம் பெறவில்லை என்று பொருள். நீங்கள் இரட்சிக்கப்படவில்லை, நீங்கள் கிறிஸ்துவுக்குளில்லை. நீங்கள் கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படவில்லை. ஒரு வேளை இதை நீங்கள் விசுவாசிக்கும்போது, உங்கள் நிலை இதோடு ஒத்துப்போனால்,

நீங்கள் எங்கள் மேல் கோபப்படலாம். ஒருவேளை நீங்கள் இப்படி நினைக்கலாம், தீர்ப்பு செய்வது தவறல்லவா? நான் இரட்சிக்கப்படவில்லை என்றும், நான் கிறிஸ்துவுக்குள் இல்லை என்றும், என் பாவங்கள் மன்னிக்கப் படவில்லை என்றும் சொல்வதற்கு நீங்கள் யார்? என்று கூட நீங்கள் நினைக்கலாம்.

தீர்ப்பு சொல்வது நானாக இருந்தால் மற்றும் நீங்கள் இரட்சிக்கப்பட வில்லை என்று சொல்வது நானாக இருந்தால் நீங்கள் நினைப்பது சரிதான். ஆனால், உண்மையென்னவென்றால், உங்கள் ஆவிக்குரிய நிலை பற்றி கூறுவது நாங்கள் அல்ல, நீங்கள் தான். அது எப்படி? இரட்சகருடைய வார்த்தைகளையும் கட்டளைகளையும் நீங்கள் மறுப்பதினால் நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்று நீங்களே சொல்லுகிறீர்கள். அவருடைய கட்டளை முக்கியமில்லை என்றும், அவருடைய மரணத்திற்குள் ஞானஸ்நானம் பெறாமலேயே இரட்சிக்கப்பட எனக்கு அதிகாரமுண்டு, அறிவுண்டு என்று அவருடைய முகத்திற்கு முன் சொல்லும் அளவுக்கு துணிவு உங்களுக்கு உண்டு. நீங்கள் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எதிராக செயல்படுகிறீர்கள். கடைசி நாளில் உங்கள் நிலையை தீர்மானிக்க இவ்வார்த்தைகள் இருக்கும். "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்ன படியே பேசுகிறேன் என்றார்" (யோவ 12:48-50).

நீங்கள் இரட்சிக்கப்பட விரும்புகிறீர்களா? கர்த்தருக்குச் செவி கொடுங்கள். அவரை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள். தேவனுடைய கிருபை உங்களை இரட்சிக்கும். அது அவ்வளவு எளிதானது.

**J.C. சோட்**

## மனிதனுக்கு தேவன் வெளிப்படுத்தின கால கட்டத்தை மூன்றாக பிரிக்கலாம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பிதாக்களின் காலம் | - | சிருஷ்டிப்பு முதல் மோசேயிடம் பிரமாணம் கொடுக்கும் காலம் வரை |
| 2. | மோசேயின் காலம் | - | மோசேயின் பிரமாணம் கொடுக்கப்படும் முதல் கிறிஸ்து சிலுவையில் மரிக்கும் வரை. |
| 3. | கிறிஸ்துவின் காலம் | - | சிலுவை தொடங்கி அவர் மீண்டும் வரும் வரை |

பெண்கள் பகுதி

# அற்பமாய் எண்ணப்பட்டவள்

தேவனுடைய சிருஷ்டிப்பில், உயிருள்ளவைகளில் விலங்கு இனத்திலாகட்டும், மனித இனத்திலாகட்டும் எல்லாம் ஒரே மாதிரியாக இல்லை. தோற்றத்தில் ஒருவேளை சில உயிரினங்கள் ஒத்திருந்த போதிலும் பண்புகளில் மாறுபட்டு காணப்படுகின்றன. சில உயிர்கள் சரீர அவயவங்களில் குறைபாடுகளுடன் படைக்கப்பட்டு விடுகின்றன. ஏன் இந்த வேறுபாடு என்று நாம் நம் சிருஷ்டிகரைப் பார்த்து கேள்வி கேட்க இயலாது. அவரால் வனையப்பட்ட பாத்திரங்களாக நாம் இருப்பதால் அவரது சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்பதைத் தவிர தேவனைப் பார்த்து கேள்வி கேட்பதற்கு நாம் தகுதியானவர்கள் அல்ல.

ஞானி சாலமோன் அற்பமான ஜெந்துவாகிய எறும்பைப் பற்றி கூறும்போது, **பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு. அவையாவன : அற்பமான ஜெந்துவாயிருந்தும் கோடைக் காலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும்** என்று (நீதி 30;24,25) கூறுகிறான். எறும்பு அற்பமாய் எண்ணப்பட்டாலும் ஞானமுள்ளதாயிருக்கிறது. நாம் இங்கு பார்க்கப்போகும் அற்பமாய் எண்ணப்பட்ட ஒரு பெண் ஆதியாகமத்தில் இருக்கிறாள். **லேயாள் அற்பமாய் எண்ணப் பட்டாள் என்று கர்த்தர் கண்டு, அவள் கர்ப்பம் தரிக்கும்படி செய்தார்** (ஆதி. 29:31).

இந்த லேயாள் முற்பிதாக்களில் ஒருவரான யாக்கோபின் தாய் மாமனாகிய லாபான் என்பவனின் மூத்த குமாரத்தி, யாக்கோபு தன் தாயாகிய ரெபேக்காளின் தவறான ஆலோசனையால் வயது சென்ற தன் தகப்பன் ஈசாக்கை ஏமாற்றி ஆசீர்வாதத்தை வாங்கிக் கொண்டு தன் அண்ணன் ஏசாவுக்கு பயந்து தன் மாமா வீட்டிற்கு ஓடிப்போகிறான்... லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். மூத்தவள் லேயாள், இளையவள் ராகேல். இந்த லேயாளுடைய கண் கூச்சப்பார்வையுடையதாயிருந்தது.

யாக்கோபு ராகேலை விரும்பி அவளை திருமணம் செய்ய ஏற்பாடுகள் செய்தான். ஆனால் லாபானோ அவனை ஏமாற்றி ராகேலுக்குப் பதிலாக லேயாளை அவனுக்குக் கொடுத்தான். காலையிலே அவள் லேயாள் என்று கண்ட யாக்கோபு லாபானிடத்தில் முறையிட்டான். அதன்பிறகு ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாக நேசித்தான். ஆகவே, லேயாளை அவன் அற்பமாக எண்ணினான். அவளுக்கிருந்த அந்தக் கூச்சப்பார்வையால் யாக்கோபு அவளை பூரணமாய் நேசிக்க இயலவில்லை. இந்த நிலையில் தான் கர்த்தர் அவளைக்காண்கிறார். கர்த்தருடைய பார்வை அவள் மேல் பட்டவுடன் அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார் என்றாள்.

கிறிஸ்வுக்குள் அருமையான சகோதரியே, நாமும் கூட அநேக சமயங்களில் அற்பமாய் எண்ணப்படுகிறோம். ஒரு வேளை நாம், நம் குடும்பத்தில், உறவினர்களிடையில், சமுதாயத்தில், இன்னும் சபையில் உரிய மதிப்புடன் இல்லாமல் இருக்கலாம். நாம் கர்த்தரை தேடும்போது நம்முடைய பலவீனங்களை அவரிடம் சொல்லி, கண்ணீர்விட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் உதவி செய்கிறார். பழைய ஏற்பாட்டில் மாபெரும் தலைவனாக இருந்த மோசே திக்குவாயும், மந்த நாவும் உள்ளவனாக இருந்தான் (யாத். 4:10) ஆனால், பிதாவாகிய தேவன் அவனைத் தெரிந்து கொண்டு தம்முடைய ஜனங்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைவனாக தெரிந்து கொண்டார். அவன் அதை ஏற்க தயங்கும் போது நீ போ, நான் உன் வாயோடே இருந்து நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்கிறார் (யாத். 4:12) புதிய ஏற்பாட்டில் நாம் பார்க்கும்போது வைராக்கியமாக இருந்து கிறிஸ்துவின் சபையை பல இடங்களில் ஸ்தாபித்த அப்போஸ்தலன் பவுல், தன் சரீரத்தில் பலவீனப்பட்டிருந்தான். சரீரத்தில் குறையுடன் காணப்பட்டான். **என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்குப்போதும், உன் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்று கர்த்தர் சொல்லி விட்டார்** (2 கொரி 12:7-9).

**ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்திய மானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப் படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவை களையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும் இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார்** (1கொரி. 1:27,28). இன்றைக்கு உலகத்தில் கல்விமான்களும், மேதைகளும், உயர்மட்டத்தில் இருப்பவர்களும் உண்மையான சத்தியத்தை புரிந்து கொள்ள மறுக்கிறார்கள், அற்பமாய் எண்ணப்பட்ட நமக்கு புதிய ஏற்பாட்டின் சத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து தம் இரத்தத்தை சிந்தி சம்பாதித்த ஒரே சபையை வெகு சிலர் தான் அடையாளம் கண்டு கொண்டுள்ளனர். கல்வி மான்களுக்கு மறைந்து, பேதைகளுக்கும், பாலகருக்கும், வெளிப்படுத்தியுள்ளார். இதையறிந்து நாம் தேவனுடைய பலத்தோடே உண்மைச் சத்தியத்தை ஓங்கி ஒலிக்க வேண்டும். தம்மை உண்மையாய் நேசிக்கிற அவருடைய பிள்ளைகளின் பலவீனத்தை கர்த்தர் பாராமல் இருப்பதில்லை. லேயாள், ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன் ஆகிய ஆறு குமாரரையும். தீனாள் என்ற குமாரத்தியை யும் பெற்றெடுக்கிறாள். யாக்கோபுக்கு பிறந்த 12 பேரும் கோத்திரப்பிதாக்கள் என்றழைக்கப்பட்டனர். அதில் லேயாளுக்குப் பிறந்த லேவியும், யூதாவும் விசேஷமானவர்கள். லேவி கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரிய ஊழியம் செய்யத் தகுதி பெற்றனர். யூதா கோத்திரம் மிகவும் விசேஷமானது. நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து யூதா கோத்திரத்தில் அவதரித்துப் பிறந்தார்.

கூச்சப்பார்வையைக் கொண்ட லேயாளின் கர்ப்பப்பிறப்பு விசேஷமான இடத்தைப் பெறுகிறது. ஏனென்றால் கர்த்தர் அவள் அற்பமாக நடத்தப்பட்டதைக் காண்கிறார். அவளுக்கு சரீரத்தில் இருந்த குறை கூச்சப் பார்வை. இன்றைக்கும் நம்மில் அநேகர் பலவீனமுள்ளவர்களாக இருக்கிறோம். கர்த்தர் நம்மைக் காண, நாம் அவருக்கு அனுமதி கொடுக்க வேண்டும். வேதத்தில் நிபந்தனைகளாக கொடுக்கப்பட்டடவைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்முடைய பலவீனங்களை நாம் ஏற்று நடக்க வேண்டம். நமக்கு இருக்கும் குறைகளையே பெரிதாக நினைத்து கர்த்தர் நம்மைக் கொண்டு செய்ய இருக்கும் காரியங்களுக்கு நாமே தடையாக மாறிவிடக்கூடாது. நம்முடைய பலவீனங்களைப் பார்த்து ஒருவேளை மற்றவர்கள், **இது இவன் செய்த பாவமா? இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமா?** என்று யோவான் 9ம் அதிகாரத்தில் அந்த பிறவிக்குருடனைப் பார்த்து கேட்டதைப் போல நம்மையும் கேள்விகள் கேட்கக்கூடும். தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்காகத்தான் இவ்வாறு பலவீனங்கள் காணப்படுகின்றன என்பதே இதன் விடை.

அற்பமாய் எண்ணப்பட்ட லேயாளின் வயிற்றில் பிறந்த யூதா வினுடைய வம்சத்தை தேவன் ஆசீர்வதித்தது போல அற்பமாய் எண்ணப்படு கிறோமே என்று அங்கலாய்க்கும் ஒவ்வொருவருக்கும் இயேசு கிறிஸ்து போதுமானவராயிருக்கிறார். அவரிடத்தில் எல்லா ஆசீர்வாதங் களும் இருக்கிறது. ஆனால், அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிற காரியங்கள் என்ன என ஆராய்ந்து வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதோ அதன்படி நடந்தால், நம்மையும் தேவன் கண்டு நம் சிறுமையை நீக்குவார்.

**ரேச்சல் ராஜநாயகம்**

## கர்த்தருடைய நாள் (வாரத்தின் முதல் நாள்)

1. **இயேசு உயிர்தெழுந்த நாள் (மாற் 16:9)**
2. **சபை ஸ்தாபிக்கப்பட்ட நாள் (அப். 2:1-47)**
3. **கர்த்தரின் பந்தி கடைபிடிக்கும் நாள் (அப். 20:7)**
4. **காணிக்கை கொடுக்கும் நாள் (1கொரி 16:2)**
5. **யோவான் ஆவிக்குள்ளான நாள் (வெளி 1:10)**
6. **பரிசுத்த ஆவி முதலில் இறங்கின நாள் (அப். 2:1-4)**
7. **இயேசு தன் சீஷர்களுக்கு அதிகாரப்பூர்வமான காட்சிகளோடு தரிசனமான நாள் (யோவா 20:19,26)**

வாலிபர் பகுதி

# ஈசாக்கின் இருதயம்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப நெஞ்சங்களுக்கு நல்லவராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல. இப்பவும் "தியான" நூலாம் திருமறை ஆசான் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்!

முற்பிதாக்களின் வரிசையில் வருகின்ற இரண்டாம் நபர் ஈசாக்கு இந்தக் கட்டுரையை அலங்கரிக்க வருகிறார். பொதுவாக, இருதயம் தான் மனிதனின் தரத்தையும் அவன் தன்மையையும் அவன் யாரென்பதையும் நமக்குக் காண்பிக்கிறது. மனந்திரும்பாத இருதயம் பொல்லாத இருதயமென்றும் (ஆதி. 6:5). மனந்திரும்புகின்ற இருதயம் தேவனுக்கேற்ற இருதயமென்றும் சொல்லப்படுகிறது (அப். 13:22). ஈசாக்கை விரும்பாத கிறிஸ்தவர்களே இருக்க முடியாது. அந்தளவிற்கு நம்முடைய இருதயத்தில் நின்றிருப்பதற்கு அவனுடைய தரத்தையும் தன்மையையும் உயர்த்தின அவனுடைய இருதயமே காரணம். ஆகவே ஈசாக்கின் உத்தம இருதயத்தைக் கவனிப்போம்.

**I ஈசாக்கும், கீழ்ப்படிதலும் :-**

ஆபிரகாமின் தவப்புதல்வன் நேசகுமாரன், ஏகசுதன் என்று தேவனுடைய குமாரனைப் பற்றி சொல்லப்பட்டது போலவே வர்ணிக்கப் படுகிறான். ஆபிரகாமிடத்திலே தேவன் உன் மகனை எனக்காக பலி செலுத்து என்றதும் தன் மகனை அழைத்துச் சென்றான் ஆபிரகாம் தேவக் கட்டளையை நிறைவேற்றுவதற்கு ஈசாக்கு எல்லா விதத்திலும் தன்னை ஒப்புக்கொடுத்தான். அடிக்கப்படும்படி கொண்டுப்போகப்படுகிற ஆட்டுக்குட்டியைப் போலவே ஒன்றும் அறியாதவனாக தகப்பனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற ஒரே எண்ணத்தில் தகப்பனுக்குப் பின் சென்றதை நாம் காண்கிறோம். தனக்கு நேரிடப்போவது இன்னதென்று அறியாதவனாக தகப்பனைப் பின்பற்றிச் சென்றான்! பிரியமான வாலிப சகோதரனே தன்னைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் தேவனுக்கும், தன் தகப்பனுக்கும் கீழ்ப்படிய வேண்டுமென்ற ஒரே நோக்கத்தில் பயணத்தைத் தொடர்ந்தான். ஆம் பிரியமானவர்களே! ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தை என்ற பெயர் பெற ஈசாக்கின் கீழ்ப்படிதலுள்ள இருதயமே காரணம். வாலிப சகோதரனே ஒவ்வொரு காரியத்திலும் பயந்து கொண்டு, நமக்கு ஏதாவது கேடு வந்துவிடுமோ என்ற சிந்தனையும் சுயத்தைக் கொல்லாத நினைவுகளும் நம்மிடத்தில் இருக்கும்போது தேவனுக்கு நாம் கீழ்ப்படிய முடியாது. சுயத்தை மறந்த நிலையில் ஈசாக்கு இருந்தான். அப்போஸ்தலர்களும் தேவனுக்குக் கீழ்ப்படிதலே அவசியமாயிருக்கிறது என்று தங்களது சுயத்தைக் கொன்றுவிட்டு தேவனுக்காய் செயல்பட்டனர் (அப். 5:28,29).

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவம் சுயத்தை மறந்து தேவனிடத்தில் தம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து பட்டப் பாடுகளினாலே கீழ்ப்படி

தலைக் கற்றுக்கொண்டார். ஈசாக்கினுடைய கீழ்ப்படிதலினாலே தனது தகப்பனுக்கும், தனக்கும் தேவனிடத்திலிருந்து மிகப்பெரிய ஆசீர்வாதம் வந்தது. அதே போல இயேசுகிறிஸ்துவின் கீழ்ப்படிதலினாலே தேவனுக்கு மகிமையும் இயேசு கிறிஸ்துவுக்கு எல்லா நாமத்துக்கும் மேலான நாமமும் கிடைத்தது (எபிரே. 5:7,5; பிலி. 2:6-11). ஆகவே தேவனுக்குக் கீழ்ப்படிதலே உத்தமமாயிருக்கிறது.

## II ஈசாக்கும், தேவச்சித்தமும் :-

ஈசாக்கின் பிறப்பு அது வாக்குத்தத்தத்தைச் சார்ந்திருந்தது. ஈசாக்கின் வாழ்க்கை எல்லாக்கட்டத்திலும் அது தேவச்சித்தத்தைச் சார்ந்திருந்தது. தன் தகப்பனாகிய ஆபிரகாம் தன்னைப் பலி செலுத்த அழைத்துச் செல்லும் போது ஈசாக்கு கேட்கிறான். கட்டையும் நெருப்புமிருக்கிறது. தகனபலிக்கு ஆட்டுக் குட்டி எங்கே என்றான். அதற்கு ஆபிரகாம் அதை தேவன் பார்த்துக் கொள்ளுவார் என்றான் (ஆதி. 32:7,8) ஆகவே சிறு பிராயம் முதல் தேவச் சித்தம் என்னவோ அதற்கு இசைந்தும், ஒப்புக்கொடுத்தும் வாழக்கற்றுக் கொண்டான். அது நன்மையானதாகவே முடிந்தது. என்பதையே நாம் கவனிக்க வேண்டும்.

பிரியமான சகோதர, சகோதரிகளே ஈசாக்கு தனது வாலிப பிராயத்திலிருந்து தேவப்பக்திக்குரிய தியானம் என்ற நல்ல பழக்கம் இருதயத்திலிருந்து வந்தது. எல்லா காரியத்திலும் தேவனுடைய சித்தத்தையே சார்ந்திருந்த ஈசா்க்கு தன்னுடைய திருமணத்திற்கும் தேவச் சித்தத்தையே சார்ந்திருந்தான் பார்வைக்கு இன்பமென்றும் இருதயத்திற்கு சுகமென்றும் நினைத்து மாம்ச உணர்வுகளுக்கு இடம் கொடுத்து அடிமையாக வில்லை, பலதாரமணங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த காலத்திலேயே அது தேவனுடைய சித்தத்திற்கு ஏற்புடையதாக இருக்காது என்று அறிந்து ஒரே மனைவியுடைய புருஷனாக திகழ்ந்தான் ஈசாக்கின் பயபக்திக்கு இதுவும் நல்ல சான்று. மாம்ச சிந்தனை, மனக்கணக்கு எல்லாவற்றையும் விட்டுவிட்டு தேவச்சித்தத்திற்குக் காத்திருந்தான். பிரியமானவர்களே ஈசாக்கின் இருதயத் தோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய இருதயம் எப்படிப் பட்டதாக இருக்கிறது மாம்ச உணர்வுக்கு அடிமைப்பட்டு அதில் சுகம் கண்டு அதற்காக தேவச் சித்தத்தை மீறுகிறவர்களாக இருக்கிறோமா என்று சிந்தித்துப்பாருங்கள். (ஆதி. 24:63) தேவனுக்கு முன்பாக நம்முடைய இருதயம் செம்மையானதாக இருக்கிறதா சிந்தித்துப்பாருங்கள்.

திருமணத்திற்குப் பின் ஈசாக்கு மழலை செல்வத்திற்காக 20 ஆண்டுகள் வரை காத்திருந்தான் (ஆதி. 25:20,26). கர்த்தரிடத்திலே ஜெபிக்கிறான் கர்த்தர் அவனுக்கு இரண்டு குழந்தைகளை அருளினார். அந்த 20 ஆண்டு காலத்திலே எத்தனை அவமானத்தையும் வேதனையையும் சந்தித்திருப்பார். ஆனாலும் கர்த்தருடைய சித்தத்திற்காகக் காத்திருந்தான் வாக்குத்தத்தங்களே அவனைப் பெலப்படுத்தினது. கர்த்தர் ஈசாக்கை கைவிடவில்லை மாத்திரமல்ல. ஈசாக்கினிடத்தில் உன் சந்ததி விளங்கும் என்று இயேசு கிறிஸ்துவைப் பற்றிய ஒரு பெரிய வாக்குத்தத் தத்தைப் பெற்றுக் கொண்டான்.

இப்படி தன் வாழ்வின் எல்லாக் காலக்கட்டங்களிலும் கர்த்தருக்குப் பயந்து கீழ்ப்படிந்து தேவச் சித்தத்துக்காக காத்திருந்து வாழ்ந்தான் ஈசாக்கு. எனவே தன் பின் நாட்களில் தேவனைப் பற்றிச் சொல்லுகின்ற போது ஈசாக்கின் பயப் பக்திக்குரியவர் என்று யாக்கோபினால் சொல்லப்பட்டது. (ஆதி. 31:42). ஆகவே முற்றும் முடிய நம்மை இரட்சிக்க வல்லமையுள்ள தேவனுக்கும் அவருடைய சித்தத்திற்கும் நம்மை ஒப்புக்கொடுப்போம்.

## III இந்த இருதயத்துக்கு மனநோவா!

பிரியமானவர்களே! ஈசாக்கு எவ்வளவு சிறப்பான தேவ பக்தியான வாழ்வு வாழ்ந்தான் என்றும் ஈசாக்கின் இருதயம் தேவனுக்கு முன்பாக எவ்வளவு செம்மையானதாகவும் இருந்தமென்றும் கண்டோம். இந்த இருதயத்துக்குள்ளும் வேதனை இருந்தது. இந்த இருதயத்துக்குள்ளும் மனநோவிருந்தது என்றால் நம்ப முடியவில்லை! அதனால் மனிதன் தேவ பக்தியாய் ஜீவிப்பதினால் அவனுக்கு லாபம் என்ன என்று யோசிக்கத் தோன்றுகிறது. 2தீமோ 3:12. ஆனால் பிரியமான வாலிபர்களே ஈசாக்கின் இந்த துக்கத்திற்கும் மனநோவிற்கும் அவன் இருதயமும் அவன் செயல்பாடு களும், ஏசாவின் மனைவிகளின் செயல்பாடுகளுமே காரணமல்ல அவனுடைய மூத்த மகன் ஏசாவின் செயல்பாடுகளும், ஏசாவின் மனைவிகளின் செயல்பாடுகளுமே காரணம் (ஆதி. 26:34,35) பிரியமான வாலிப சகோதர சகோதரிகளே இன்றைக்கு நாம் யாருடைய மனதை புண்படுத்தி அந்த இருதயத்துக்கு நோகவா இருக்கிறோம் என்று நாமறிவோம் அப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பீர்களானால் தயவு செய்து மனந் திரும்புங்கள் பிறர் மனதை புண்படுத்தி நோகடித்து மகிழ்வதை விட்டு விடுங்கள். அதிலே தேவன் பிரியப்படமாட்டார் என்று அறியுங்கள். தேவனுக்கு ஏற்றபடி சிந்தியுங்கள்.


**முடிவுரை :**

ஆகவே, பிரியமானவர்களே! எக்காலத்திலும் தேவன் விரும்புகிற படியே செயல்படுவோம். மாறாக, தேவனுக்குக் கீழ்ப்படியாமல் துணிகரம் கொண்டு செயல்படுதல், தேவசித்தத்திற்கு காத்திராமல் அவசரப்படுதல் அல்லது மீறிச் செய்தல் எத்தனையோ பிரச்சனைகளையும் வேதனைகளையும் கொண்டு வருவமே ஒழிய சமாதானத்தையல்ல தேவனுக்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கிற வாலிபர்களே இதைக் கவனியுங்கள் தேவச் சித்தத்தை நிறைவேற்றாமல் விலகி நிற்கிற வாலிபர்களே இதைக் கேளுங்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் முரட்டாட்டம் செய்வீர்களானால் உங்களைத் தொடப்போவது சமாதானமல்ல. சஞ்சலம் தான் உங்களைத் தொடரப்போவது பரமனின் ஆசீர்வாதமல்ல பட்டயமே என்பதைப் புரிந்து கொண்டு, பாவத்தையும், துரோகத்தையும் விட்டு விட்டு கர்த்தருக்காக எழுந்து வா, கர்த்தருக்காகக் காத்திரு, அவர் உன்னை உயர்த்துவார். அவரே உன்னை ஆசீர்வதிப்பார். ஆமென்

**K. சேகர்,** திருப்பூர்.

சிறுவர் பகுதி

# இயேசுவுக்கு உதவின சிறுவன்



எனதருமை சிறு பிள்ளைகளே உங்கள் யாவரையும் இந்த மாதமும் இந்த இதழின் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாதந் தோறும் வெளிவரும் செய்திகள் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதா யிருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் உங்களைப் போல ஒரு சிறுவனை பற்றி பார்க்கப் போகிறோம்.

சரி, நம் எல்லாருக்கும் தெரிந்தபடி இயேசு இந்த பூமிக்கு வந்தார். அவர் அநேக ஜனங்களுக்கு உபதேசித்து வந்தார். அவர் மலைகளிலும், கடல் ஓரங்களிலும் பிரசங்கித்து வந்தார். அவர் ஒரு சிறந்த போதகர் என்று தெரிந்த ஜனங்கள் அவரை பின்பற்றத் தொடங்கினர். அவர் எங்கே சென்றாலும் ஒரு கூட்ட ஜனம் அவருக்கு பின் சென்றது. கலிலேயாக் கடல்கரையில் ஒரு முறை அவர் ஜனங்களுக்கு போதித்துக் கொண்டிருந்தார் (யோ. 6:4-14). 5000க்கும் அதிகமான பேர் அவருடைய வார்த்தைகளை கேட்கவந்தார்கள். அந்த ஜனங்களுக்கு பசி ஏற்பட்டதை அறிந்த இயேசு இவர்கள் சாப்பிட தக்கதாக அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். இயேசு தாம் தேவனுடைய குமாரனென்று மக்களுக்கு நிரூபிக்க இதை ஒரு தருணமாக பயன்படுத்திக்கொண்டார்.

அச்சமயத்தில் ஒரு சிறுபையன் அந்த கூட்டத்தில் தன்னுடைய ஆகாரத்தை கையில் பிடித்து கொண்டிருந்தான். அவனிடம் 5 அப்பங்களும், 2 மீன்களும் இருந்தன. பின்பு இயேசு அந்த அப்பங்களை வாங்கி ஸ்தோத்திரம் பண்ணி சீஷரிடம் கொடுத்தார். அதை 5000 புருஷரும், பெண்களும், சிறுவர்களும் உட்கொண்டு மீதியான துணிக்கைகளை 12 கூடை நிறை எடுத்தார்கள். என்ன ஒரு அற்புதம் பாருங்கள்!!! இந்த அற்புதம் அநேக ஜனங்கள் இயேசுவை விசுவாசிக்க உதவியாயிருந்தது (6:33-35).


அந்த குட்டிபையனின் பெயர் நமக்கு தெரியவில்லை. அந்த அற்புதம் தன்னால் நடந்தது என்று நிச்சயம் பூரித்திருப்பான் தானே.

சரி, இதிலிருந்து என்ன பாடம் நமக்கு கிடைக்கிறது என்றா யோசிக்கிறீர்கள்? சரி சொல்கிறேன். நாம் நம் மூலம் தேவனின் நாமம் மகிமைப்பட இச்சிறுவயதிலிருந்தே உதவ வேண்டும். அதற்காக, நமக்கு கிடைக்கும் சமயங்களை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

என்ன சிறுவர்களே, நம் மூலம் தேவன் மகிமைபட்டால் அது எவ்வளவு ஆசீர்வாதம், நினைத்துப்பாருங்கள்! யோசியுங்கள்! என்ன வழியில் செயல்படலாம் என்று யோசித்து செயல்படுங்கள். தேவனுக்கு பிரியமான பிள்ளையாக இருங்கள்! தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**R.A.R. NAYAGAM.**

## கண்டுபிடியுங்கள் - 2




<u>மேலிருந்து கீழ் :</u>

1. போவாஸின் மனைவி (மத். 1:5) (2)
2. பரலோகத்தில் எதை சேர்த்து வைக்க வேண்டும் (மத் 6:19) (5)
5. யாக்கோபின் சகோதரன் (மத். 17:1) (3)

<u>இடமிருந்து வலம் :</u>

3. சாந்தகுணமுள்ளவர்கள் (மத். 5:5 (6)
4. இயேசுவின் சகோதரன் (மத். 13:55) (2)
6. இயேசுவின் பாதத்தில் விழுந்தவன் (லூக்கா 5:8) (3)

## இதையும் வட்டமிட்டுக் கண்டுபிடியுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வா | க் | ஆ | ம் | வா | கு | ச | கு | ஆதாம் |
| தா | ஏ | ம் | தா | ஈ | சா | க் | கு | ஏவாள் |
| பு | கு | பு | ஆ | ங் | னோ | ஏ | ம் | நோவா |
| த் | சா | சா | அ | ஏ | க | நோ | கா | ஆபிரகாம் |
| மெ | த் | தூ | ச | லா | பு | பு | ர | ஈசாக்கு |
| லா | க் | பி | கு | கோ | யா | கு | பி | யாக்கோபு |
| மெ | கா | தா | க் | கா | நோ | பி | ஆ | மெத்தூசலா |
| கு | ஏ | யா | ம் | ஏ | ள் | வா | ஏ | ஏனோக்கு |

**இதைக் கிழிக்காமல் தனித்தாளில் சரியான பதில் எழுதி அனுப்பவும். பரிசு உண்டு.**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த இரண்டு மாதங்களாக ஒன்றான மெய்ச்சபையை அடையாளம் கண்டுபிடிப்பதற்கான தேவனுடைய மாதிரியின் இன்னொரு பகுதி, அந்தச் சபையின் வேலை என்று பார்த்தோம். இவைகளெல்லாம் தேவன் சபைக்குக் கொடுத்த வேலைகளாக உள்ளது. (1) ஆத்தும ஆதாயம் (2) சபையை அன்பினாலே தட்டி எழுப்புவது (3) சத்தியத்திற்குத் தூணும், ஆதாரமுமாய் இருப்பது (4) ஏழைகளுக்கும், தேவையில் இருப்போருக்கும் உதவுவது (5) தேவனுக்கு மகிமை சேர்ப்பது. இப்பொழுது ஒன்றான மெய்ச்சபையை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு தேவன் கொடுத்துள்ள மாதிரியின் அடுத்த பகுதியைப் பார்க்கப் போகிறோம். இது, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபையிலிருந்து இதை வேறுபடுத்திக் காட்டும்.

**புதிய ஏற்பாட்டு சபை தனித்துவம் பெற்றது, ஏனெனில், இதன் விசுவாச காரியங்களுக்கு வேத வசனங்களே ஆதாரம்.**

"இப்படிச் சொல்வதன் பொருள் என்ன" என்று நீங்களே கேட்கலாம். இதோ கவனியுங்கள். கிறிஸ்துவின் சபைக்கு, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கை, கோட்பாடு புத்தகங்களோ அல்லது விசுவாச அறிக்கை போன்றவைகளோ அல்லது நடைமுறைப் பழக்கங்களுக்கான வழிகாட்டி களோ இல்லை. மாறாக, நாங்கள், வேத வசனங்கள் சொல்லுவதை மாத்திரம் பின்பற்றுகிறோம். குறிப்பாக, பாவத்திலிருந்து எப்படி இரட்சிப்படைவது, ஒரு கிறிஸ்தவனாக வாழ்வது எப்படி, தேவனை எப்படி சரியாக ஆராதிப்பது, சபையின் ஆளுகை எப்படியிருக்க வேண்டும் இன்னும் ஜீவனுக்கும், தேவபக்திக்கும் தேவையான எல்லாவற்றுக்கும் நாங்கள் புதிய ஏற்பாட்டை மாத்திரம் பின்பற்றுகிறோம்.

மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஏனைய சபைப் பிரிவுகளிலிருந்து கிறிஸ்துவின் சபையை வேறுபடுத்திக்காட்டும் தேவனுடைய மாதிரியின் வேறொரு பகுதி.

**நானும், நீங்களும் பாவத்திலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதற்குப் புதிய ஏற்பாடு விவரிக்கும் சபையின் போதனை தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது.**

மாற்கு 8:36ல், இயேசு நமக்கிருக்கும் விலைமதிப்பில்லாத ஆத்துமா மிகவும் முக்கியமானது என்று தெளிவுபடுத்தியுள்ளார். நாம் நித்தியத்தைப் பரலோகில் கழிக்க, நம்முடைய ஆத்துமாக்கள் தொடர்ந்து கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, அவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழ்ந்து மரிக்க வேண்டும். பாடம் 2-ல், பாவ மன்னிப்பைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டுமென தேவன் சொல்லுகிறார் என்று படித்தோம்.

நம்முடைய மன்னிப்பு, தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை இவைகளைச் சார்ந்ததாக உள்ளது (எபே. 2:4-6). நம்முடைய முழு இருதயத்தோடு, தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை ஆகியவற்றுக்காக நாம் அவரைத் துதித்து நன்றி செலுத்துகிறோம். குறிப்பாக, அந்தக் கொடுமையான சிலுவையில் தேவத் திட்டத்தின்படியாக இயேசுவின் தியாக மரணத்திற்காக!.

தேவனுடைய அன்பு, இரக்கம், கிருபை ஆகிய இவைகளைக் கொண்டு, நாம் நம்முடைய பாவங்களிலிருந்து மீட்பைப் பெற, நாம் செய்ய வேண்டிய சில காரியங்கள் உண்டு என தேவன் புதிய ஏற்பாட்டில் தெளிவு படுத்தியுள்ளார். நாம் சுவிசேஷத்தைக் கேள்விப்பட வேண்டும், ஏனெனில், அதைக் கொண்டுதான் நம்முடைய இருதயங்களில் விசுவாசம் உண்டாகிறது (ரோம. 10:17). தேவனையும், இயேசு அவருடைய ஒரே பேறான குமாரன் என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும் (ரோம 11:6, யோவ 8:21-24). நம்மை மனந்திரும்பத் தூண்டும்படியாக நாம் தேவனுக்கேற்ற துக்கம் கொள்ள வேண்டும் (2கொரி. 7:10) அதாவது, சாத்தானுக்கும், பாவத்துக்கும் சேவகம் செய்யும்படியான நிலையிலிருந்து நம்முடைய மனதை கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும்படியாக மாற்ற வேண்டும். இயேசுவில் இருக்கும் நமது விசுவாசத்தை வாயினால் அறிக்கை செய்ய வேண்டும் (ரோம. 10:9,10). பிறகு, நானும், நீங்களும் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு, கிறிஸ்து வுக்குள்ளாக்கப்பட்டு, ஒன்றான மெய்ச்சபையில் தேவன் நம்மைச் சேர்க்கும் படியாய், தண்ணீருக்குள் முழுகி ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 2:38; 22:16; ரோம. 6:3,4; அப். 2:47).

ஞானஸ்நானத்தின் மூலம் நம்முடைய பாவங்கள் கழுவப்பட்ட பிறகு தேவனுடைய வார்த்தைகளுக்கு நாம் தொடர்ந்து கீழ்ப்படிய வேண்டும். ஆவியோடும், உண்மையோடும் அவரை ஆராதிக்க வேண்டும், பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும், மீண்டும் பாவ செய்ய நேர்ந்தால் அப்பாவங்களி லிருந்து மனந்திரும்ப வேண்டும், அப்படிப்பட்ட பாவங்களை அறிக்கை யிட்டு, தேவன் மன்னிக்கும்படியாய்க் கேட்க வேண்டும். (1 யோவா. 1:7, யோவா 4:23,24; 2கொரி. 7:1; 1யோவா. 1:8,9; அப். 8:22).

நித்திய காலத்திற்கும் முக்கியமானதாக இருக்கக்கூடிய, பாவ மன்னிப்பு குறித்து வேதாகமத்தில் காணப்படும் இந்த மறுக்க முடியாத எளிய உண்மையை பல பிரிவினைச் சபைகள் சரியாகப் போதிப்பதில்லை. ஆகவே, சபைக்காக தேவன் கொடுத்திருக்கும் மாதிரியோடு இவர்கள் ஒத்துப் போவதில்லை. ஆகையால், அவைகள் இயேசுவாலே ஸ்தாபிக்கப்பட்டதும், அவருடைய இரத்தத்தாலே வாங்கப்பட்டதுமான சபைகளாக இருக்கு முடியாது. அது, நம்முடைய இருதயத்தை உடைக்கக்கூடிய வேதனையான ஒன்று.

அருமையானவர்களே! இப்பொழுது நான் உங்களிடத்தில் இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். நீங்கள் அங்கமாக இருக்கும் சபை, பாவ

மன்னிப்பு குறித்தான இந்த எளிய உண்மையைச் சரியாகப் போதிக்கா விட்டால், அச்சபை வேறு காரியங்கள் குறித்து சரியாகப் போதிப்பார்கள் என்று எப்படி நம்ப முடியும்? இந்த எளிய உண்மையை அவர்கள் சரியாகப் போதிக்காததால், அவர்கள் உங்கள் ஆத்துமாக்களையும், நித்திய வாழ்க்கை யைப் பரலோகத்தில் தேவனோடு கழிக்கும் பாக்கியத்தையும் அவர்கள் ஆபத்துக்குள்ளாக்குகிறார்கள்!

அப்படிப்பட்ட சபையில் நீங்கள் அங்கமாக இருந்தால், பாவ மன்னிப்புக்கான இந்த எளிய உண்மைக்குக் கீழ்ப்படியும்படியாய், அதிலிருந்து வெளியே வரும்படி மன்றாடுகிறோம். மேலும் நாங்கள் உங்களுக்கு உதவும்படியாய், விரைவாக எங்களைத் தொடர்பு கொள்ளும் படியாகவும் வேண்டுகிறோம். இங்கே இன்னுமொரு முக்கியமான கேள்வி.

**புதிய ஏற்பாட்டில் தேவன் விவரித்திருக்கும் ஒன்றான மெய்ச் சபையை அடையாளம் கண்டு அதில் அங்கம் வகிப்பது ஏன் அவ்வளவு முக்கியமானது?**

கீழ்வரும் வேத வசனங்கள் சொல்லும் உண்மைகளைப் பாருங்கள்

<u>அப். 20:28</u> -ஐ வாசிக்கவும். ஒருவன் ஒன்றிற்குக் கொடுக்க விரும்பும் விலையிலிருந்து அதன் மதிப்பை நாம் தீர்மானிக்கிறோம். இந்த வசனத்தில், இயேசு சபைக்காக இரத்தத்தை விலையாகக்கொடுத்தார் என்று வாசிக்கிறோம்! உண்மை இப்படியிருக்கும் போது, சபை முக்கியமானது அல்ல என்று எப்படிச் சொல்ல முடியும்? தன்னுடைய விலைமதிப்பில்லாத இரத்தத்தை இயேசு சிந்தியுள்ளபடியால் சபை முக்கியமானதே. ஆத்துமாக் களைச் சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தத்தினால் கிடைக்கும் நன்மையை நானும், நீங்களும் தொடர்ந்து பெற்றுக் கொள்ள வேண்டுமானால், நாம் அந்த சபையில் இருக்க வேண்டும்.

<u>எபே. 5:25</u> வாசிக்கவும். இயேசு சபையை நேசித்து, அதற்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார் என்று சொல்வதன் மூலம், தேவன் ஒன்றான மெய்ச் சபையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். ஒரு மிருகத்தையோ அல்லது மிருகத்தின் இரத்தத்தையோ அதற்காக கொடுக்கவில்லை. மாறாக, இயேசு கிறிஸ்து தன்னையே தந்தார்! சபை முக்கியமற்றதாக இருக்குமானால், இயேசு ஏன் தன்னையே தியாக பலியாக சபைக்காகத் தந்தார்?.

இந்த உண்மையையும் தயவு செய்து கவனியுங்கள். நம்முடைய கர்த்தர், மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட எந்தவொரு பிரிவினைச் சபைக்கும் தன்னைத் தியாகமாய் கொடுக்கவில்லை! கிரேக்க மொழியில், இயேசு சபைக்காக தன்னைக் கொடுத்தார் என்று தெளிவாகக் கூறுகிறார்.

<u>அப். 2:47</u> வாசிக்கவும். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் என்ன செய்கிறார்? அவர்களைச் சபையில் சேர்க்கிறார்! யார் இரட்சிக்கப்பட்டவர் கள்? இரட்சிக்கப்பட்டவர்களென்பவர்கள், மன்னிப்பைப் பெறும்படியாய் வேத வசனங்கள் என்ன சொல்லுகிறதோ அதைச் செய்பவர்கள்.

கிரேக்க மொழியில் இவ்வசனத்தில் சபை என்ற வார்த்தை ஒருமையில் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பொழுது ஒரே ஒரு சபைதான் இருந்தது. அந்தச் சபைப் பற்றித்தான் புதிய ஏற்பாட்டில் தேவன் அடையாளப் படுத்துகிறார். அது பற்றித்தான் நாம் படித்து வருகிறோம்.

அந்தச் சபை எவ்வளவு முக்கியமானது? இரட்சிப்பு அந்த ஆவிக்குரிய சபையில் தான் உள்ளது!

<u>மத். 13:44</u> வாசிக்கவும். "ராஜ்ஜியம்" என்ற வார்த்தையை சபையைக் குறிக்கும்படி தேவன் அடிக்கடி பயன்படுத்துகிறார் என்று நாம் படித்ததை நினைவில் கொள்ள வேண்டும். அந்த ராஜ்ஜியமாகிய சபையை இயேசு எப்படி விவரித்துள்ளார்? அது ஒரு "**பொக்கிஷம்**" போன்றது. அதாவது, அது மிகுந்த விலைமதிப்புள்ளது! அந்த பொக்கிஷத்தை மனிதன் கண்டுபிடித்த போது, அவன் என்ன செய்தான்? சந்தோஷப்பட்டான்! அந்த பொக்கிஷத் தைப் பெற்றுக்கொள்ள அவன் என்ன விலை கொடுக்க விருப்பப்பட்டான்? தன்னிடமுள்ள எல்லாவற்றையும் விட்டு அதைப் பெற்றுக்கொள்ள விரும்பினான்! இதன் மூலம் இயேசு இங்கே என்ன கூறுகிறார்? உலகில் உள்ள எல்லாப் பணத்தைக் காட்டிலும் அவருடைய உண்மையான சபை அதிக விலையுள்ளதாக உள்ளது! உண்மை இப்படியாக இருக்கும்போது ஏன் பல பிரிவினைச் சபைத் தலைவர்கள், பாஸ்டர்கள், குருமார்கள் நாம் எந்தச் சபையில் அங்கமாக இருக்கிறோம் என்பது முக்கியமல்ல என்று கூறுகிறார் கள்?.

<u>எபே. 1:22,23</u> வாசிக்கவும் இதில், தேவன் சபையை எப்படி விவரிக்கிறார்? சபை கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரம். ஆகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரத்தின் பகுதியாக இருக்கிறான். நாம் கிறிஸ்துவின் சபையில் இருந்தால், நாம் அவரின் பகுதியாக உள்ளோம்! இது எவ்வளவு அருமையான ஆசீர்வாதம்! நாம் கிறிஸ்துவின் உண்மைச் சபையில் இருக்கும்போதுதான் அவருடன் ஆழமான, நெருக்கமான உறவைப் பெற்றுக் கொள்ள முடியும்!

மேலும், சபையாகிய ஆவிக்குரிய சரீரத்தின் தலையாக இயேசு உள்ளார். இக்கருத்தை மனதில் கொண்டு, கிறிஸ்தவ உலகில் பலர் சொல்லும் ஒரு விபரீத கருத்தை நாம் அலசிப் பார்க்க வேண்டும். சிலர், இயேசு எனக்கு வேண்டும், சபை எனக்கு வேண்டாம் என்று கூறுவார்கள். எபே. 1:22,23-ன் படி இந்தக் கருத்து சரியாக இருக்க முடியுமா? இவர்களின் இந்த எண்ணம் தேவன் சொல்லுவதோடு முரண்படுகிறது! சபையாகிய ஆவிக்குரிய சரீரத்திலிருந்து தலையாகிய இயேசுவை நாம் பிரிக்க முடியாது.

<u>எபே. 1:3</u> வாசிக்கவும். தேவனுடைய எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், இந்த வசனத்தின்படி நீங்கள் எங்கே இருக்க வேண்டியது அவசியம்? நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்! கிறிஸ்துவுக்குள் இருப்பதென்பது, அவருடைய ஆவிக்குரிய சரீரமாகிய அவருடைய உண்மையான சபைக்குள் இருப்பதாகும். ஆகையால், தேவனுடைய எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின் சபைக்குள்ளாக உள்ளது. ஞானஸ்நானத்தின் மூலம் தான் அந்த

ஒரே ஒரு சபைக்குள்ளாக வர முடியும் என்று நாம் வேத வசனங்களில் பார்த்தோம் (ரோம. 6:3,4, கலா. 3:26,27)

தேவனுடைய எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிறிஸ்துவின் சபைக்குள் இருக்கும்போது, அதற்கு வெளியே எந்த ஆசீர்வாதங்கள் இருக்கிறது? கிறிஸ்துவின் சபைக்கு வெளியே எதுவும் இல்லை என்பது உங்கள் பதிலாக இருக்குமானால், நீங்கள் சொல்லுவது சரி! ஆகையால், தேவன் கிறிஸ்துவின் சபை மிகமிக முக்கியம் என்று தேவன் தெளிவு படுத்துகிறார்! இந்த உலகத்திலிருக்கும் மனிதர்கள் என்ன சொன்னாலும், இது தான் உண்மை.

சபை முக்கியமானது என்பதை வலியுறுத்தும் இன்னும் பல வேத வசனங்களை நாம் அடுத்த மாதம் படிக்க விரும்புகிறோம். நீங்கள் அந்த ஒரே சரீரமாகிய சபைக்குள் ஞானஸ்நானம் பெற்றிருந்தால், நீங்கள் அதற்காக மகிழ்ச்சியடைய வேண்டும். இல்லையானால், நாம் படித்த வேத வசனங்கள் உண்மையாக இருப்பதால் விரைவில் நீங்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**சார்லிடீபால்மா**

## நாளும் நடப்பும்

1. சென்னையில் மெட்ரோரயில் ரூ. 9,757 கோடி திட்டத்திற்கு அமைச்சரவை ஒப்புதல்.
2. 87 கொடிய விஷப் பாம்புகளுடன் தங்கி அமெரிக்கர் மீண்டும் சாதனை.
3. பாகிஸ்தானில் தீவிரவாதத் தாக்குதலால் இந்த ஆண்டில் 667 பேர் பலி.
4. அக்டோபர் மாதத்தில் மட்டும் 400 விடுதலைப்புலிகள் சாவு. இலங்கை ராணுவம் தகவல்.
5. இந்தோனேசியாவில் பறவைக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 90 ஆக உயர்வு.
6. பிரிட்டனில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 10 வயது சிறுவன் 10 மொழிகளில் பேசி சாதனை புரிந்தான்.
7. ஜனவரி 9-க்குள் பொதுத்தேர்தல் முஷாரப் திடீர் அறிவிப்பு.
8. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு கேப்டனாக அனில்கும்ப்ளே நியமனம்.

# கழுதையிடமிருந்து

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே உங்களை வாழ்த்துகிறேன். மேலே உள்ள தலைப்பை பார்த்ததும் உங்களுக்கு ஆச்சரியமாய் இருக்கிறதா? நீங்கள் வேதாகமத்தை அனுதினமும் படிக்க கூடியவர்களாக இருந்தால் நிச்சயம் உங்கள் பதில் இல்லையென்று தான் வரும். ஏனென்றால் கழுதையைப் பற்றி மற்ற மிருகத்தை காட்டிலும் வேதாகமம் சற்று அதிகமாகவே பேசுகிறது. சரி இந்த நேரத்தில் நம் கட்டுரையின் தலைப்பை அலங்கரித்திருக்கிற இந்த "கருத்தாளன்" கழுதையை பற்றியும் அதன் பின்னனியையும் நாம் தெரிந்து கொள்வோமென்றால் நாம் படிக்க போகும் கட்டுரைக்கு பிரயோஜனமுள்ளதாக இருக்கும்.

நாம் இன்று வாழும் இந்த நவீன உலகத்தில் பிரயாணம் என்பது மிகுந்த சுலபமாகவும், சுகமாகவும் இருப்பதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். அப்படிப்பட்ட பிரயாணத்தை நாம் சுகமாக அனுபவித்தும் இருப்போம், சாலைகளில் வலது சாரியாகவும் இடது சாரியாகவும் வரும் வேகமான வாகனங்களும், காற்றை கிழித்து கொண்டு பறக்கும் வானவூர்திகளும் காற்றை துவசம் செய்யும் மின்சார ரெயில்களையும் பார்க்கின்றபோது நம்முடைய பிரயாணம் வெகு சுலபமாகவும், சென்றடைய வேண்டிய இடத்தை வெகு சீக்கிரத்தில் சென்றடைகிறோம். ஆனால், சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக வாழ்ந்த மக்களின் நிலை பார்க்கவே பரிதாபமாகவே இருக்கும். ஏனென்றால், நாம் இன்று பார்ப்பது போல சாலை வசதிகளோ செம்மையான பாதைகளோ அன்று இல்லை. கரடுமுரடான பாதைகளும் உயரமான மேடுகளும் அச்சுறுத்தும் குன்றுகளும் அன்று இல்லாமல் இல்லை, ஆனாலும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் அன்று வாழ்ந்த மனிதனும் பிரயாணம் செய்தான். பிரயாணம் என்பது முற்காலத்திலே இருந்து வந்து கொண்டே தான் இருக்கிறது.

முற்காலத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு செல்ல மனிதன் மிருகங்களை பயன்படுத்தினான். அப்படி பயன்படுத்தப்பட்ட மிருகங்களில் ஒன்றுதான் கழுதை. வேதாகமத்தில் முற்பிதாக்களில் மூத்தவனாகிய ஆபிரகாம் இதை பயன்படுத்தினான் (ஆதி. 22:3). பின்பு வேதாகமத்தை வாசிக்கும்போது அநேகர் தங்களுடைய பிரயாணத்துக்காக கழுதைகளை பயன்படுத்தினார்கள். இந்த கழுதையின் பயனை மனதில் கொண்டு தான் தேவன் பிரமாணங்களை கொடுக்கும் போது பிறனுடைய கழுதைகளை இச்சியாதே (யாத். 20:17) என்கிறார். சரி நாம் இப்பொழுது நம்முடைய பாடத்திற்கு வருவோம்.

கழுதையிடமிருந்து நாம் என்ன கற்றுக் கொள்ள முடியம் என்று ஒருவேளை நாம் யோசிக்கலாம். நாம் கழுதையிடமிருந்து பாடங்களை கற்றுக் கொள்வதைக் காட்டிலும், கழுதை ஒரு தீர்க்கதரிசிக்கு மிகப்பெரிய பாடங்களை கற்றுக்கொடுத்து இருக்கிறது என்று சொன்னால் நிச்சயமாக.

உங்களுக்கு வியப்பும், யார் அந்த தீர்க்கதரிசி என்ற கேள்வியும் எழும்புவது நிச்சயம். இக்காரியத்தை குறித்து பரிசுத்த ஆவியானவர் புதிய ஏற்பாட்டு பக்கங்களில், "செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்து, பேயோரின் குமாரனாகிய பிலேயாமின் வழியைப் பின்பற்றிப் போனவர்கள்; அவன் அநீதத்தின் கூலியை விரும்பி, தன்னுடைய அக்கிரமத்தினிமித்தம் கடிந்து கொள்ளப்பட்டான்; பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதி கேட்டைத் தடுத்தது" (2பேது. 2:15,16) என்கிறார். அதைக் குறித்து சற்று விரிவாகப் பார்ப்போம்.

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி, வானத்தின் நட்சத்திரங்களைப்போல திரளான இஸ்ரவேலர்கள் கெம்பீர நடையோடும், மிகுந்த செல்வங்களோடும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்த கானானை நோக்கி கனவுகளோடு திரள்திரளாய் புறப்பட்டார்கள். வேதாகமத்தில் வாசிக்கின்ற போது புருஷர்கள் மட்டும் ஆறுலட்சம் பேர் (யாத். 13:37) என்று கூறுகிறது. அந்த புருஷர்களுடைய மனைவியையும், பிள்ளைகளையும் கணக்கு போட்டால் அப்பப்பா! எவ்வளவு திரளான ஜனங்கள், இந்த எல்லா ஜனங்களையும் தேவன் ஒரு தகப்பனைப் போல் வழி நடத்தினார். இவர்களுக்காக செங்கடலை பிளந்தார். வானத்திலிருந்து மன்னாவை கொடுத்தார். அக்கினி ஸ்தம்பத்திலும், மேக ஸ்தம்பத்திலும் வழி நடத்தினார். ஆனாலும் இந்த ஜனங்களுடைய முறுமுறுப்பினாலும், பாவத்தினாலும், அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயத்தினாலும் கொஞ்ச நாட்கள் நடக்க வேண்டிய பிரயாணத்தை தேவனுடைய கோபத்தினாலே 40 வருடங்கள் அலைந்து திரிந்தார்கள். அவர்களை அலைகழித்த தேவன் அவர்களுடைய பாவத்தினிமித்தம் அவர்களை அழித்து கொண்டே வந்தார். அவர்கள் அலைகழிக்கப்பட்ட போது ஒரு தேசத்திற்கு வந்து பாளயம் இறங்கினார்கள்.

அந்த தேசம்தான் மோவாப் என்றும் தேசம், அந்த தேசத்தை ஆண்டு கொண்டு இருந்தவன் தான் பாலாக். இந்த திரளான ஜனங்களை கண்டு தேவன் இவர்களோடு இருக்கிறார் என்ற நடுக்கத்திலும் இவர்கள் தன்னை மேற்கொண்டு விடுவார்களோ என்ற பயத்திலும் அவன் யோசித்து கொண்டு இருக்கும்போது தரங்கெட்ட வஞ்சக எண்ணம் அவன் மனதிலே தோன்றியது. அது என்னவென்றால் தேவன் வழி நடத்தி வந்த இஸ்ரவேல் ஜனங்களை சபிக்கும்படியாக தேவனுடைய தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்ற புறஜாதி தீர்க்கதரிசியை கண்டுபிடித்தான், தேவனுடைய தீர்க்கதரிசிகள் மக்களை ஆசீர்வதித்தால் அவர்களை தேவன் ஆசீர்வதிப்பார் என்றும் சபித்தால் தேவன் அவர்களை சபிப்பார் என்றும் நினைத்து (எண் 22:5,6) தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தை அறியாத அவன் பிலேயாமிடத்தில் ஸ்தானாபதிகளை அனுப்பினான். அவர்கள் பிலேயாமிடத்தில் வந்து பாலாக் சொன்ன விஷயத்தை சொன்னார்கள். ஆனால் தேவன் பிலேயாமிடத்தில் வந்து அவனை நோக்கி; நீ அவர்களோடு போக வேண்டாம் அவர்கள் (இஸ்ரவேலர்கள்) ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றார் (எண் 22:12) இதைக் கேட்ட பிலேயாம் பாலாக் அனுப்பின ஸ்தானாபதிகளிடம் தேவன் எனக்கு உத்தரவு கொடுக்க வில்லையென்று சொல்லி திருப்பி அனுப்பிவிட்டான்.

திரும்பிப்போன ஸ்தானாபதிபகள் சுவரில் அடிக்கப்பட்ட பந்தைப் போல பாலாக்கினிடத்திலிருந்து திரும்பி பிலேயாமிடம் வந்து உம்மை மிகவும் கனம் பண்ணுவேன் (பொருளாசையை தூண்டினார்கள்) என்று

(எண்.22:17) பாலாக் சொன்ன வார்த்தையை சொன்னார்கள். அதைக்கேட்ட பிலேயாம் தேவனிடத்தில் உத்தரவு கேட்டான், அதற்கு தேவன் அவனை நோக்கி; நீ எழுந்து அவர்களோடே போ, நான் உனக்கு சொல்லும் வார்த்தை யின்படி மாத்திரம் நீ செய்ய வேண்டும் என்றார் (எண் 22:20) இதைக்கேட்டு சந்தோஷம் அடைந்த பிலேயாம் காலமே எழுந்து தன் கழுதையின் மேல் சேணங்கட்டி மோவாபின் பிரபுக்களோடே கூடப்போனான் (எண் 22:21) ஆனால் அடுத்த வசனத்தில் அவன் போகிறதினாலே தேவனுக்கு கோபம் மூண்டது (எண் 22:22) என்று நாம் வாசிக்கின்ற போது குழப்பத்தை உருவாக்குகிறது. போகச் சொன்ன தேவன் எதற்காக பிலேயாமின் மீது கோபப்படுகிறார். அவன் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து தானே போனான் என்று ஒருவேளை யோசிக்க தோன்றும். ஆனால், தேவன் மனம் மாறுவதற்கு அவர் ஒரு மனுபுத்திரன் அல்ல (எண் 23:19) என்று வேதம் விளம்புகிறது.

பின்பு ஏன் தேவனுக்கு பிலேயாமின் மீது கோபம் வந்தது என்று பார்ப்போமானால் வேத வசனம் சொல்கிறது பிலேயாமுடைய எண்ணம் மாறுபாடாய் இருந்தது (எண். 22:32) அவனுடைய எண்ணம் தேவனுடைய ஜனங்களை சபிக்கும் நோக்கத்தோடு புறப்பட்டுப்போய் இருக்கிறான். அதனால் தான் அவன் மேல் தேவ கோபம் மூண்டது அவனை அழிக்கும்படியாக தேவன் தம்முடைய தூதனானவரை அனுப்பினார். உருவின பட்டயத்தோடு அவனை அழிக்கும்படியாக அவனுக்கு எதிராளியாக நின்றார் (எண் 22:23) ஆனால் அதை மதிகெட்ட தீர்க்கதரிசி அறியவில்லை மதி குறைந்த கழுதை அறிந்து கொண்டது. வசனத்தை வாசியுங்கள் "கர்த்தருடைய தூதனானவர் உருவின பட்டயத்தைத் தம்முடைய கையிலே பிடித்துக் கொண்டு வழியிலே நிற்கிறதைக் கழுதை கண்டு வழியை விட்டு வயலிலே விலகிப்போயிற்று; கழுதையை வழியில் திருப்ப பிலேயாம் அதை அடித்தான், கர்த்தருடைய தூதனானவர் இருபுறத்திலும் சுவர் வைத்திருந்த திராட்சை தோட்டங்களின் பாதையிலே போய் நின்றார், கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு, சுவர் ஓரமாய் ஒதுங்கி பிலேயாமின் காலைச் சுவரோடே நெருக்கிற்று; திரும்பவும் அதை அடித்தான், அப்பொழுது கர்த்தருடைய தூதன் அப்புறம் போய் வலதுபுறம் இடது புறம் விலக வழியில்லாத இடுக்கமான இடத்திலே நின்றார். கழுதை கர்த்தருடைய தூதனைக் கண்டு பிலேயாமின் கீழ்ப்படுத்துக்கொண்டது; பிலேயாம் கோபம் மூண்டவனாகி கழுதையைத் தடியினால் அடித்தான்" (எண் 22:23-27) என்கிறது.

கர்த்தருடைய தூதனானவர் பிலேயாமுக்கு எதிராளியாக நின்றதை அந்த மதிகெட்ட தீர்க்கதரிசி அறியவில்லை, மதி குறைந்த கழுதை அறிந்து கொண்டது. அதனால்தான் வேத வசனம் கூறுகிறது, "பேசாத மிருகம் மனுஷர் பேச்சைப் பேசித் தீர்க்கதரிசியினுடைய மதிகேட்டை தடுத்தது" (2பேது 2:16) என்று இந்த கழுதையை பற்றி வேத வசனம் சாட்சி பகருகிறது. பிலேயாம் அந்த கழுதையை அடித்தபோது உடனே கர்த்தர் கழுதையின் வாயைத் திறந்தார் (எண் 22:28) என்கிறது. அந்த கழுதை தன் செய்கையின் மூலமாகவும் பிலேயாமிடத்திலே பேசின வார்த்தைகளின் மூலமாகவும் அவனுக்கு என்ன பாடம் தான் சொல்லிக் கொடுத்தது என்பதை நாம் ஆராய்ந்து பார்த்துக் கற்றுக்கொள்வோம்.

**(தொடரும்)**

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

# பாடம் - 4. அந்திரேயா

கடந்த பாடத்தில் பேதுரு இரத்த சாட்சியாக கொல்லப்பட்டதை படித்தோம். இந்த பாடத்தில் பேதுருவை அழைத்து வந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிமுகப்படுத்திய அப்போஸ்தலனாகிய **அந்திரேயா**வைக் குறித்தும், அவரது ஊழியத்தைக் குறித்தும், அவரது இரத்த சாட்சியைக் குறித்தும் அறிந்து கொள்வோம்.

## I அந்திரேயாவின் வாழ்க்கைக் குறிப்பு

கர்த்தருடைய 12 அப்போஸ்தலரில் இவரும் ஒருவர். மற்ற அப்போஸ்தலரைக் காட்டிலும், இவர் தனது பெயருக்கு தகுந்தவாறு மிகவும் தைரியசாலி! உலகத்திலே சொல்வது போல, மூத்தது கோழை இளையது காளை! என்பது போல தன் சகோதரனாகிய பேதுருவைவிட இளைய சகோதரனான இவர் தைரியசாலியாக இருந்துள்ளார்.

ஒரு சமயத்தில் இயேசுவின் அற்புதத்தைக் கண்டு கிரேக்கர்கள் இயேசுவை காண வேண்டும் என்று பிலிப்புவினிடத்தில் கூறினார்கள். பிலிப்பு அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான். பின்பு அந்திரேயாவும் பிலிப்பும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள் (யோவ. 12:20-22) இன்னொரு சமயத்தில் இயேசு 5 அப்பமும் 2 மீன்களை கொண்டு 5,000 பேரை அற்புதவிதமாக உணவளித்த நிகழ்ச்சியில், இயேசுவிடம் தைரியமாக அணுகி இங்கே ஒரு பையன் இருக்கிறான் அவன் கையில் 5 வாற்கோதுமை (பார்லி) அப்பங்களும் 2 மீன்களும் உண்டு. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். (யோவ. 6:8,9) இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது இவர் மகா தைரியசாலிதான்! என்று ஒப்புக்கொள்ள வைக்கின்றது அந்திரேயா என்ற சொல்லுக்கு அர்த்தமாக வாழ்ந்துள்ளார்.

இவரது சொந்த ஊர் கலிலேயா நாட்டிலுள்ள "பெத்சாயிதா" பட்டணத்தைச் சார்ந்தவர் (யோவ. 1:44). பெத்சாயிதா என்றாலே "மீன் வீடு" என்று பொருள். அதற்கு தகுந்தாற்போல் இங்கே மீனவர்கள் அதிகமானோர் வாழ்ந்தனர். அதுபோல அந்திரேயாவும் மீனவக் குடும்பத்தை சார்ந்தவர். கப்பர் நகூமில் மீன் பிடிக்கும் தொழிலை செய்து வந்தார். கிறிஸ்துவுக்காக காத்திருந்தார். யோவான் ஸ்நானகன் இயேசுவை, "இதோ! உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"! என்று சாட்சி கொடுத்ததின் பேரில் இயேசுவுக்குப் பின் சென்ற முதல் சீஷன் ஆவார் (யோவ. 1:35-40).

## II அந்திரேயாவின் ஊழியம்

பேதுருவுக்கு இளைய சகோதரன், ஆனால் இயேசுவுக்கு முதல் சீஷன். அப்போஸ்தலரின் பெயர் பட்டியலில் முதலாவதாக பேதுருவின் பெயர் இடம் பெற்றிருந்தாலும் இயேசுவை முதலாவதாக அறிந்து பின்பற்றிய

பெருமை அந்திரேயாவுக்கே சாரும். அவரது துடிப்பும், இளமையும் மற்றும் அவரது தைரியமும் முதலாவதாக பின்பற்றும்படி செய்தது எனலாம். இன்றைய நாட்களில் வாழும் வாலிபர்கள் தங்கள் துடிப்பையும், இளமை யையும், தைரியத்தையும் அநித்தியமான பாவ சந்தோஷத்திற்கு ஒப்புக் கொடுத்து தங்களை வீணர்களாக்கி வாழ்ந்து வருகின்றனர். இப்படிப்பட்ட வர்களுக்கு பரிசுத்த வேதம் கூறுவது என்னவென்றால் வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னை பூரிப்பாக்கட்டும் உன் நெஞ்சின் வழிகளிலும் உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவை எல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி! நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு. இளவயதும் வாலிபமும் மாயையே, நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை... (பிரசங்கி 11:9,10; 12:1) வாலிபர்களின் வழிகளை சுத்தமாக்குவது பரிசுத்த வேதாகமம் மட்டுமே யன்றி வேறே ஆகமங்கள் இல்லை (சங்கீதம் 119:9).

அந்திரேய ஆண்டவரின் அப்போஸ்தலர்களில் ஒருவரானார். அவரது ஊழியத்தைக் குறித்த தகவல்கள் அதிகமாக வேதத்தில் சொல்லப்பட வில்லை என்றாலும் அவரது ஊழியம் சிறந்த விளங்கியதாக சரித்திர தகவல்கள் தெரிவிக்கின்றன.மேலும் தனது மூத்த சகோதரனை அதாவது பேதுருவை இயேசு கிறிஸ்துவிடம் அழைத்து வந்து அவரை மேசியா என்று அறிக்கையிட்டு அறிமுகப்படுத்தினார் (யோவ. 1:41,42). கலிலேயா கடலின் மறுகரையின் திபேரியா கடல் பக்கத்திலுள்ள ஒரு மலையின் மீது இயேசு உட்கார்ந்து 5,000 பேருக்கு போதித்த சமயத்தில் ஒரு பையனை இயேசுவிடம் அறிமுகப்படுத்தி 5 அப்பங்கம் 2 மீன் மூலமாக 5,000 பேருக்கு உணவளிக்கும் இயேசுவின் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உடன் ஊழியராக இருந்தார் (யோவ. 6:8,9). மேலும் சில கிரேக்கர்களையும் இயேசுவிடம் அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார் (யோவ. 12:20-22) இப்படியாக அந்திரேயா ஆண்டவராகிய இயேசுவை அநேகருக்கு அறிமுகப்படுத்துவதிலும் இயேசு கிறிஸ்துவுக்கு உடன் ஊழியராகவும் இருந்துள்ளார். இன்றுள்ள வாலிப சகோதரர்களை உடன் ஊழியராக செயல்படுவதற்காக வேதாகமப் பயிலகங்களுக்கு ஊழியர்களால் அனுப்பப் படுகின்றனர். ஆனால் அவர்கள் தங்கள் ஊழியருக்கும், சபைக்கும் பல இடறல்களை உண்டாக்கி ஒற்றுமையாக இருந்த சபையை பிரித்து சபையை பாழ்ப்படுத்துகின்றனர். உடன் ஊழியம் என்பது இது அல்ல! இது மாம்சத்தின் கிரியையே! (கலாத். 5:19-21).

இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்து 12 சீஷர்களுக்கு சுவிசேஷக் கட்டளை கொடுத்தார் (மாற்கு 16:15,16) அதன்படி அந்திரேயாவும் பல இடங்களுக்கு சென்று சுவிசேஷத்தை தைரியமாக அறிவித்தார். பவுல் அப்போஸ்தலன் பேதுருவைக் காண எருசலேமுக்கு


(கி.பி. 36-38க்குள்) சென்றபோது அப்போஸ்தலர்கள் ஒருவரும் அங்கு இல்லை (கலாத். 1:18-20) எல்லாரும் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து விசுவாசமுள்ளவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து இரட்சிப்பை பெற்றுக் கொள்ள வழிநடத்தி வந்துள்ளனர். அந்திரேயாவும் இப்படிப்பட்ட ஊழியத்தை செய்ய பல நாடுகளுக்கு சென்றுள்ளார்.

**III அந்திரேயா இரத்த சாட்சியாகக் கொல்லப்படுதல்**

அந்திரேயாவின் தியாக மரணத்தைக் குறித்து வேதம் கூறவில்லை. இருப்பினும் இவரது மரணத்தைக் குறித்து சில சரித்திர உண்மைகள் கூறுகின்றன. இவர் இயேசுவைக் குறித்து கேள்விப்படாத மக்களுக்கு சுவிசேஷத்தைச் சொல்ல பல நாடுகளுக்கு சென்ற சமயத்தில் இப்போதுள்ள "ரஷ்யா" நாட்டிலுள்ள ஜார்ஜியா என்ற பகுதியில் இருக்கின்ற "காக்கசீய" என்ற மலை அடிவாரத்தில் வசிக்கின்ற மலை நாட்டு மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். பின்பு இப்போதுள்ள இஸ்தான் புல் (அப்போது பைசாண்டியம் என்று பெயர்) பகுதியில் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். இதன் பலனாக ஸ்டாகிஸ் என்ற ஒரு முக்கிய நபர் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தார். இதன் விளைவாக அந்திரேயாவுக்கு பல எதிர்ப்புகளும், போராட்டங்களும் ஏற்பட்டது. பலமுறை அவர் சிறையில் அடைக்கப்பட்டார்! அதன்பின்பு அவர் கிரீஸ் நாட்டிலுள்ள கிரேஸ் பகுதியிலும், மாசிடோனியா பகுதியிலும் சுவிசேஷத்தை அறிவித்து வந்தார். கடைசியாக பட்ரோஸ் என்ற பட்டணத்திற்கு வந்து சுவிசேஷத்தை அறிவித்தார். அங்கே அதிபராக இருந்த ஏஜியேடிஸ் என்பவரின் மனைவி மேக்சிமில்லா சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தாள். இதன் விளைவாக அதிபர் ஆத்திரமடைந்து அந்திரேயா சுவிசேஷம் சொல்வதை நிறுத்தாவிட்டால் சித்திரவதை செய்யப் போவதாக கூறி பயமுறுத்தினான். ஆனால் அந்திரேயா அந்த பயமுறுத்தல் களுக்கு பயப்படாமல் தொடர்ந்து தைரியமாக சுவிசேஷத்தை பிரசங்கித்து தன்னை பயமுறுத்திய அதிபர் "ஏஜியேடிஸ்" மனந்திரும்ப வேண்டும் என்று போதித்தார். அதிபர் மேலும் கடுங்கோபம் கொண்டு அந்திரேயாவை சிலுவையில் அறைந்து கொல்லும்படி கட்டளையிட்டான். அதன்படி கி.பி. 69 நவம்பர் 30-ல் அந்திரேயாவை "பெருக்கல்" (X) வடிவத்தில் சிலுவையில் அறைந்தார்கள். இரண்டு நாட்கள் மரிக்காமல் சிலுவையில் தொங்கிக் கொண்டு வேதனையை அனுபவித்தார். அவரை பார்க்க வந்த மக்களுக்கு அந்த வேதனையிலும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். இறுதியாக அந்திரேயா சிலுவையில் ஜெபித்து மரித்தார் என்று நம்பப்படுகிறது. அந்திரேயாவின் உடலை அதிபரின் மனைவி மேக்சிமில்லா பட்ரோசில் அடக்கம் செய்தாள் என்று சரித்திர உண்மை கூறுகிறது.

அன்பானவர்களே, பாடுகள் வழியாகத்தான் பரலோகம் செல்ல முடியும். வேதனை இல்லாமல் சாதனை இல்லை. எனவே கிறிஸ்துவுக்காக பாடுகள் ஏற்றுக்கொண்டு வேதனைகள் மூலம் சாதனைகளைச் செய்வோம்.

(தொடரும்) **K. பாஸ்கர், சிறுமுகை.**



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postel Registration No. Erode / 26 / 2006 - 2008
Posted at Erode HPO on 20 th or 21 st of Every Month



பத்தாவது வேதாகம கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் மற்றொரு பகுதி




பத்தாவது வேதாகம கருத்தரங்கில் கருத்துரையாற்றியவர்கள்

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor : S. Rajanayagam.
Ph : 04257 - 222955, 222555